வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 09.08.2021 திங்கட்கிழமை | இதழ் : 248 | பக்கங்கள் : 16




## கொரோனாவின் கோரப்பிடிக்குள் நாடு

# 12 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்துங்கள்

## அரசிடம் ரணில் அவசர கோரிக்கை



கொழும்பு, ஓக.09

**“கொரோனாத் தொற்றின் கோரப்பிடிக்குள் நாடு சிக்கித் தவிக்கின்றது. இதிலிருந்து மக்களைப் பாது காக்கும் பொறுப்பு அரசுக்கே உண்டு. எனவே, 12 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு விரைந்து முன்னெடுக்க வேண்டும்.”**

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் தற்போதைய கொரோனா பரவல் நிலைமை தொடர்பில் நேற்று ஊடகங்க ளிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:-

“கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக மருத் துவ நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

நாட்டில் கொரோனா பரவல் மிக வேகமாக அதிக ரித்து வருகின்ற நிலையில் நாளாந் தம் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் சுகா தார அமைச்சின் கண்காணிப் பின் கீழ் முன்னெடுக்கப்படா மல் இராணுவத்தினரின் கண் காணிப்பில் முன்னெடுக்கப் படுவது அதிருப்தியளிக் கின்றது” - என்றார். (இ)

## சீனி உள்ளிட்ட சில பொருட்களின் விலைகள் 10 ரூபாயால் எகிறியது

கொழும்பு, ஓக. 09

இறக்குமதி செய்யப்படும் வெள்ளை சீனி மற்றும் சிவப்பு பருப்பு உள்ளிட்ட மேலும் சில பொருட்களின் விலைகள் ஒருவாரத்துக்குள் 10 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, தற்போது சிவப்பு பருப்பு கிலோ வொன்றின் மொத்த விற்பனை விலை யானது 180 ரூபாயாகவும், வெள்ளை சீனி

15

## மேலும் 94 பேர் மரணம்

கொழும்பு, ஓக. 09

நாட்டில் மேலும் 94 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

ஷசுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய கத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மரணித்தோரில் 69 ஆண்க ளும், 25 பெண்களும் அடங்குகின்றனர் என் றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆயி ரத்து 111 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## எனது மகன் அரசியலில் ஈடுபடப்போவதில்லை

### சந்திரிகா குமாரதுங்க சொல்கிறார்

கொழும்பு, ஓக. 09

தனது மகன் விமுக்தி குமாரதுங்க அரசியலில் ஈடுபடப்போகிறாரென வெளிவரும் செய்தியில் எவ் வித உண்மையும் இல்லை என முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மகன் விமுக்தி குமாரதுங்க இலங்கை அரசியல் களத்தில் இறங்கப் போகிறாரென பல்வேறு தக வல்கள் சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் வெளியாகி இருந்தன.

15

## எதிர்வரும் 2 வாரங்கள் தீர்மானமிக்கவை; மக்களே அவதானத்துடன் செயல்படுங்கள்

### அரசும் சுகாதாரத்துறையும் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 09

இலங்கையில் சமகாலத்தில் கொரோனா வைரஸ் தீவிரமாக பரவி வரும் நிலையில், பொது மக்களுக்கு அரசும் சுகாதாரத் துறையும் எச்சரிக்கை விடுத் துள்ளது.

எதிர்வரும் 15 நாட்கள் தீர் மானமிக்கவை என்பதால் பொது மக்கள் மிக அவதானமாகச் செயல் பட வேண்டும் எனவும் அறி வுறுத்தப் பட்டுள்ளது.

கடந்த ஒரு வார காலப் பகுதியில் மாத்திரம் 670

15

## யாழ்ப்பாணத்தில் 45 பேர் உட்பட வடக்கில் நேற்று 68 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஓக. 09

யாழ்ப்பாணத்தில் 45 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 68 பேர் நேற்று தொற்றாளர்க ளாக அடையாளம் காணப் பட்டனர்.

யாழ். போதனா மருத்துவ மனையில் ஆய்வுகூடத்திலேயே இந்த விடயம் வெளிவந்தது. அங்கு நேற்ற 673 பேரின் மாதி ரிகள் பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டன.

இதில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், யாழ்ப்

15

## ‘செல்பி’ எடுக்க பாலத்தில் ஏறியவர் தவறி வீழ்ந்து காணாமல் போனார்

### யாழ். பண்ணைக் கடலில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 09

‘செல்பி’ எடுப்பதற்காக பண் ணைப் பாலத்தின் தூணில் ஏறிய இளைஞர் ஒருவர் தவறி கடலில் வீழ்ந்து காணாமல் போயுள்ளார்.

நேற்று மாலை 6 மணி யளவில் யாழ்ப்பாணம் பண் ணைப் பாலத்தில் இடம் பெற்ற இந்த சம்பவத்தில் நல்லூரை சேர்ந்த கௌதமன் (வயது 29) என்பவரே இவ்வாறு காணா மல் போனவராவார்.

15

## நாளாந்தம் அதிகரிக்கும் தொற்றாளர்கள் நேற்று 2,956 பேருக்குக் கொரோனா உறுதி

கொழும்பு, ஓக. 09

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 2 ஆயிரத்து 956 பேர் நேற்று அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று

15

ஈழநாடு

Eelanadu

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

## மரணம் மிகவும் அருகில்?

நாட்டின் கோவிட் தொற்று நிலைமை கட்டுப்பாட்டை மீறிச் சென்றுவிட்டதாக இலங்கை சுகாதார பரிசோத கர் சங்கம் தெரிவிக்கின்றது. இந்த நிலைமை தொடர்ந்தால் கோவிட் தடுப்பு மையங்களை அமைப்ப தற்கு பதிலாக, உடல்களை தகனம் செய்யும் நிலையங் களையே அமைக்க வேண்டிவரும் என்று குறித்த சங்கம் எச்சரித்திருக்கின்றது. கோவிட் செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா அடுத்து வரும் இரண்டு வாரங்கள் முக்கிய மானவை என்று தெரிவித்திருக்கின்றார். அவசிய மின்றி வீடுகளை விட்டு செல்ல வேண்டாம் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்திருக் கின்றது. மருத்துவ நிபுணர்கள் சிலர் நிலைமைகள் தொடர்பில் தொடர்ந்தும் எச்சரித்து வருகின்றனர். நாட்டை மீண்டும் முடக்க வேண்டும் என்றும் கோரிக் கைகள் முன்வைக்கப்படுகின்றன. முழுமையான முடக்கம் எப்போதும் வரலாம் ஒருவேளை பொரு ளாதார நிலைமைகளை கருத்தில் கொண்டு அரை முடக்கமாகவும் இருக்கலாம். ஆனால், எல்லாவற்றை யும் விடவும் முக்கியமான ஒன்று இருக்கின்றது. அது?

(03 ஆம் பக்கம் பார்க்க)

## பரபரப்பை ஏற்படுத்திய மைத்திரியின் முகநூல் பதிவு

கொழும்பு, ஓக.09

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது முகநூலில் இட்டுள்ள பதிவால் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பும், கேள்விக்குறி களும் ஏற்பட்டுள்ளன.

15

# இ. போ. ச. பேருந்து சேவை இன்றுமுதல் வழமைக்கு!



யாழ்ப்பாணம், ஓக. 09

கொரோனா நெருக்கடியால் இடை நிறுத்தப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து சேவை இன்று முதல் வழமையான சேவையில் ஈடுபடும் என இ. போ.சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

45,00 பேருந்துகளை இன்றுமுதல் சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மாத்திரம் பயணிகளை அனுமதிக்குமாறு சகல மாகாணங்களில் உள்ள சாரதிகள் மற்றும் பேருந்து நடத்துநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார். (ஐ)

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு சிறிய ஊரில் இரண்டு குறும்பான சிறுவர்கள் இருந்தனர்.

ஊரில் ஏதாவது காணாமல் போனால் இவர்களைத்தான் முதலில் விசாரிப்பார்கள். பெற்றோர்களால் அறிவுரை கூறி அவர்களைத் திருத்த முடியவில்லை.

ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு துறவி வந்தார்.

பெற்றோர் அந்த துறவியை அணுகி சிறுவர்களைப் பற்றிக் கூறி அவர்களை திருத்த வழி கேட்டனர்.

அவரும் ஒரு சிறுவனை அன்று மாலை தனியாகத் தன்னை பார்க்க அனுப்பி வைக்கச் சொன்னார். ஒரு சிறுவன் அனுப்பப்பட்டான்.

துறவி அந்தச் சிறுவனை முதலில் ஐந்து நிமிடம் கண்ணை மூடிக்கொண்டு அமரச் சொன்னார். பின்னர் கேட்டார், தம்பி உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன் நீ பதில் சொல்ல வேண்டும். கடவுள் எங்கே? சொல் கடவுள் எங்கே இருக்கிறார்?

துறவி அவனைக் கேட்டார்.

அவன் அங்கிருந்து உடனே ஓட்டமாய் ஓடிவந்து வீடு சேர்ந்தான். அடுத்த சிறுவன் அவனிடம் ஓடி வந்ததற்கான காரணம் கேட்டான்.

இவன் சொன்னான்,

‘நாம் பெரிய ஆபத்தில் இருக்கிறோம். இப்ப கடவுளைக் காணோமாம். அந்த ஆள் என்னைக் கூப்பிட்டு எங்கே எங்கே என்று கேட்கிறான். ஏற்கனவே ஏதாவது காணோம் என்றால் நம் மீதுதான் பழி சொல்வார்கள் இப்போது இந்தப் பிரச்னையும் நம் தலையில் தான் விழும் போலிருக்கிறது.’

ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் சிறுமி ஒருத்தி மர்மமானமுறையில் மரணமானதைத் தொடர்ந்து வெளிவரும் செய்திகள் மர்மநாவல் ஒன்றைப் படிப்பதுபோல இருக்கின்றன.

ஒருவர் ஒரு செய்தியைச் சொன்னாலேயே அதனை பலவாறு உலாவவிடும் அளவிற்கு இன்று நிலைமைகள் இருக்கின்றன. சமூக ஊடகங்கள் என்பது அவரவர் தத்தமக்கு விருப்பமானதை எழுதுகின்ற களமாக மாறி விட்டதும் இதற்குக் காரணம்.

அந்தச் சிறுமியின் மரணத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமானதோ அதேபோன்றே, ரிஷாத் நிரபராதி எனில் அவருக்கும் நீதி கிடைக்கப்படுவது உறுதிசெய்யப் படவேண்டும்.

சிறுமியை வேலைக்கு அமர்த்தியது அவரது தவறு என்பது எவ்வளவு உண்மையானதோ அதேபோன்றே, அந்தச் சிறுமியை வேலைக்கு அனுப்பிய பெற்றோரும் குற்றவாளிகளே.

ஒருவர் வேலைக்கு வரும்போது வயது என்ன என்பதைக் கேட்டால் அவர் நிச்சயம் தனது வயதை பதினெட்டுக்கு மேலே ஒரு வயதைத் தான் சொல்வார். பதினெட்டு வயதிலேயே எல்லோரும் தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதும் இல்லை.

வழக்கமாகவே ரிஷாத் வீட்டுக்கு பணிப் பெண்களை வேலைக்கு கொண்டுவந்துகொடுப்பவர் ஒரு தரகர். அவர் நீண்டகாலமாகவே ரிஷாத்துடன் தொடர்பில் இருந்திருக்கிறார். எனவே அறிமுகமான ஒருவர் சொல்வதை நம்பிக் கொண்டு வேலைக்கு அமர்த்தியிருக்கலாம்.

அவரது வீட்டில் முன்னர் பணியாற்றிய இரு பெண்கள் இதற்கு முன்னரும் மரணமடைந்தனரென சில செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

அவரது வீட்டில் பணியாற்றிவிட்டு வேலையிலிருந்து விலகியவர்கள் பின்னர் தற்கொலை செய்துகொள்வதற்கும் ரிஷாத்திடம் நியாயம் கேட்பதும் சரியானதாக இருக்காது.

சிறுமியின் மரணம் மிகக்கொடூரமானது. அதற்கு நீதி கிடைக்கவேண்டும். ஆனால், அதற்காக வெளியில் இருப்பவர்கள் விசாரணையாளர்களாகவோ அல்லது, நீதிபதிகளாகவோ மாறிவிடக்கூடாது.

அது விசாரணைகளையே பாதிக்கச் செய்துவிடும் என்பதை முகநூலில் இந்தச் சம்பவத்தை ‘சத்திரசிகிச்சை’ செய்பவர்கள் முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

அந்தச் சிறுவர்களின் நிலை வேறு எவருக்கும் வந்துவிடக்கூடாது.!

**- ஊர்க்குருவி**

## பருத்தித்துறை சிவன் ஆலய திருவிழாவை நிபந்தனைகளுடன் நடத்துவதற்கு அனுமதி!

வடமராட்சி, ஓக. 09

பருத்தித்துறை சிவன் கோவில் திருவிழா பூசைகளை கடும் நிபந்தனைகளுடன் சுகாதா ரப் பிரிவு அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

பருத்தித்துறை சிவன் ஆலயத்தில் கடந்த ஐந்து நாட்களாக திருவிழா வெளிவீதியிலும் இடம்பெற்றது.

கோவிட் தொற்று பரவல் காரணமாக கோவில் திருவிழாக்கள் வெளிவீதியில் சுவாமி சுற்ற முடியாது என அறிவிக்கப்பட்ட நிலையில், அதனை மீறி செயல்பட்டமையால் நேற்று முன்தினம் அந்த ஆலயம் சுகாதாரப் பிரிவினரால் மூடப்பட்டது.

இதையடுத்து, ஆலயத்தின் உள்ளே பூசை நடத்தவேனும் அனுமதி வழங்க வேண்டும் என்று பக்தர் ஒருவர் ஆலய வளாகத்தின் முன்றலில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டார். இதைத் தொடர்ந்து தற்போதைய தொற்று நிலைமையில் வெளியிலிருந்து பூசகரை அழைத்து திருவிழா பூசைகளை மட்டும் நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (ஐ -2)

## பளை விபத்தில் மூவர் படுகாயம்!

கிளிநொச்சி, ஓக. 09

பளை - முல்லையடியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் மூவர் படுகாயமடைந்தனர்.

ஏ9 வீதியூடாக கிளிநொச்சி நோக்கி சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இரு பெண்கள் மீது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், சைக்கிளில் பயணித்த தாயும் மகளுமாக இரு பெண்களும் படுகாயங்களுக்கு இலக்காகினர். அத்துடன், மோட்டார் சைக்கிள் தாரியும் காயமடைந்தார்.

காயமடைந்தவர்கள் முதலில் பளை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். காயமடைந்த பெண்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

விபத்துக் குறித்து பளை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

### கல்வி TV CHANNEL-1 — 09.08.2021 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி TV CHANNEL - 2 — 09.08.2021 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu 09.08.2021 திங்கட்கிழமை ඊළනාඩු
பிலவ வருடம், ஆடி 24
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# மரணம் மிகவும் அருகில்?

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமைகள் தொடர்ந்தும் மோசமடைந்தால் ஒருவேளை மீண்டும் நாடு முடக்கப்படலாம். ஆனால், நாடு முடக்கப்படுவதால் மட்டும் பிரச்னைகள் சரியாகிவிடுமா? அதன் பின்னர் மரணங்கள் நிகழாதா? மக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கில்தான் முடக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், கோவிட் தொற்று பலமடைந்துவிட்டால் அதன் பின்னர் முடக்கம் பெரியளவில் பலனளிக்காது. தற்போது வெளியாகும் செய்திகளின்படி, நாட்டை முடக்கினால்கூட நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியுமா என்னும் சந்தேகம் எழுந்திருக்கின்றது. இப்போது ஒரேயொரு வழிதான் உண்டு. அதாவது, மக்கள் மிகுந்த அவதானத்துடன் நடந்து கொள்வது ஒன்றுதான் மரணங்களை தடுப்பதற்கான ஒரேயொரு வழிமுறை.

தற்போது உலகில் மிகவும் வேகமாக பரவிவரும் டெல்டா திரிபு வைரஸ், ஏற்கனவே பரவிய கொரோனா வைரஸ் வகையை விடவும் மிகவும் சக்திவாய்ந்தது. தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களையும் தாக்கக்கூடியது. எனவே, மிகுந்த அவதானத்துடனும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும் இருந்தால் மட்டும்தான், மக்கள் இந்தத் தொற்றிலிருந்து தப்பிக்கொள்ள முடியும். கட்டாயமாக முகக் கவசங்களையும், சமூக இடைவெளியையும் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும். தவிர்க்க முடியாத விடயங்கள் இருந்தால் மட்டும்தான் வெளியில் செல்ல வேண்டும். கூட்டமாக இருப்பதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். இதனை ஒரு சமூக கடமையாகவே ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும். இளைஞர்கள் தங்களின் வழமையான களிப்பு விளையாட்டுக்கள் அனைத்திற்கும் ஓய்வுகொடுத்து, உடற்பயற்சி, தியானம், யோகா போன்றவற்றை வீட்டிலிருந்தவாறு மேற்கொள்ளுங்கள். உண்மையில் ஒவ்வொருவரும் இதனை ஒரு சமூக கடமைபோல் மேற்கொள்ள வேண்டும். இந்த சமூக கடமை என்பது உங்களுடைய உயிரை பாதுகாப்பதற்காக நீங்கள் செய்யும் கடமை.

கரணம் தப்பினால் மரணம் என்பார்கள். அவ்வாறான ஒரு சூழலையே, தற்போது நாம் ஒவ்வெருவரும் எதிர்கொண்டிருக்கின்றோம். நாம்தான் நமக்கு காவல். நாம்தான் நமக்கு மருந்து. இப்போது வேறு எவராலும் உங்களுடைய உயிரைக் காப்பாற்ற முடியாது. நீங்கள் மட்டும்தான் உங்களை காப்பாற்றிக்கொள்ள முடியும். மரணம் உங்களுக்கு அருகில் வந்துவிட்டது. எப்போதும் அது உங்களை தீண்டலாம். நீங்கள் துடிதுடித்து இறக்கலாம். வீதிகளில், சந்தைகளில், வியாபார ஸ்தலங்களில், ஆலயங்களில் எங்கும் நீங்கள் மரணிக்கலாம். அந்தளவிற்கு நிலைமை மோசமடைகின்றது. ஒரு பொறுப்பு வாய்ந்த ஊடகம் என்னும் வகையில், உங்களுக்கு உண்மையான செய்திகளை தருவதுடன் எங்கள் கடமை முடிந்துவிடவில்லை. மாறாக, உங்களின் பாதுகாப்பு, நல்வாழ்விலும் எங்களுக்கு அதீத கரிசனை உண்டு. அந்த அடிப்படையில்தான் உங்களிடம் இந்த வேண்டுகோளை முன்வைக்கின்றோம். மிகவும் அவதானாக இருங்கள், பாதுகாப்பில் கவனயீனமாக இருக்க வேண்டாம். மரணம் உங்கள் அருகில் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றது என்னும் விழிப்புணர்வுடன் இருங்கள். அந்த விழிப்புணர்வு ஒன்றினால்தான் உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள முடியும். இப்போது உங்களை காத்தருள வேறு எவரும் இல்லை. நிங்கள் மட்டும்தான் இருக்கின்றீர்கள்.



# கலைஞரும் பாபாவும்

■ எஸ்.டி.எஸ். உதயநாயகம்

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதியின் மூன் றாண்டு நினைவு தினம் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி, திராவிடக் கொள்கையில், நாஸ்திகராக இருந்தாலும், மனிதநேயம், மற்றும் வேற்று இன, மதத்தவர்களுக்கு, கொடுக்கவேண்டிய கௌரவம் போன்றவற்றில் மிகவும் போற்றக்கூடிய ஒரு மகா உத்தமராக இருந்தார். பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா உருவாக்கிய "சாயி மார்க்கம்" சர்வ மதக் கோட்பாட்டைக் கொண்டது. அவர் அனைத்து மதங்களுக்குரிய மரியாதையையும், அனைத்து இனத்தவர்களின் மத உரிமைகளையும் மதித்து, சாதி, இன, மதம், குளங்களைக் கடந்த ஒரு ஸ்தாபனமாக வளர்த்தெடுத்தார்.

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதியும், இந்தக் கோட்பாடுகளைக் கொண்ட வர்தான். அதனால்தான், அவர் தமிழகம், மற்றும் அனைத்துலக தமிழ் மக்களின் மனங்களைக் கவர்ந்தவர். தமிழ்நாடு, ஆந்திரா அரசுகள் செய்ய முடியாத ஒரு பெரும் திட்டமான "கிருஷ்ணா நதிநீர் திட்டத்தை" பகவான் செய்து காட்டினார். ஆந்திராவி லிருந்து தமிழ்நாட்டுக்கு கொங்கிறீட் கால்வாய் அமைத்து, வரும் நதிநீர் வழியில் எங்கும் தடைப்படக்கூடாது, என்ற குறிக்கோளுடன், பெரும் தொகை செலவில் அமைத்துக் கொடுத்தார்.

இதனைத் தமிழ்நாடு அரசு பெருமை யாக நினைத்து பகவானுக்கு நன்றி தெரிவித் தது. அதுமட்டுமல்ல 2007ஆம் ஆண்டு, பகவானின் கரங்களினால் அந்தத் திட்டத்தை ஆரம்பித்துவைத்து திறப்புவிழாவாக நடாத்தி வைக்க, அப்போது முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி, பகவானை சென்னைக்கு அழைத்திருந்தார். சென்னைக்கு வந்த, பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்கள், டாக்டர் கலைஞரின் இல்லத்துக்குச் சென்று, அவரை வாழ்த்தி ஆசிர்வதித்தார். அங்கிருந்த கலைஞரின் குடும்பத்தினர் பலர், கலைஞர் முன்னிலையில் பகவான் கால்களில் விழுந்து ஆசி பெற்றார்கள். பகவான் அவர்களுக்கு தனது சக்தியால் விபூதியும், மோதிரங்களும் வரவ ழைத்து கொடுத்தார்.

> "இந்திய நாட்டு அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல, உலகில் பல நாட்டு அரசியல் தலைவர்கள், பகவானை அவரது இருப்பிடத்துக்குச் சென்று தரிசித்து ஆசி பெற்றிருக்கிறார்கள். ஆனால் திராவிடக் கொள்கையில் நாஸ்திகராக, அரசியல்வாதி கலைஞரை, பகவான் அவரது இல்லம் சென்று, ஆசிர்வதித்தது ஒரு வியப்பான சம்பவமாகும்."

இந்திய நாட்டு அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல, உலகில் பல நாட்டு அரசியல் தலைவர்கள், பகவானை அவரின் இருப்பிடத்துக்குச் சென்று தரிசித்து ஆசி பெற்றிருக்கிறார்கள். ஆனால் திராவிடக் கொள்கையில் நாஸ்திகரான, அரசியல்வாதி கலைஞரை, பகவான் அவரது இல்லம் சென்று, ஆசிர்வதித்தது ஒரு வியப்பான சம்பவமாகும்.

அப்போது பத்திரிகை நிருபர்கள், இது பற்றி பகவானிடம் விசாரித்தபோது, பகவாபன் "அவரது இதயத்தில் எனக்கோர் இடம் இருக்கிறது. அதுபோன்று எனது இதயத்திலும் அவருக்கு ஓர் இடம் உள்ளது. அவர் எடுத்த இந்தப் பிறவியானது, மாமன்னன் இராஜ இராஜ சோழனது மறு பிறவியாகும். அதனால்தான் அந்த மாமன்னனை, இந்தப்பிறவியில் சந்தித்தேன்" என்றாராம். அந்த நிகழ்வு சாயி பக்தர்களுக்கு மட்டுமல்ல, அனைத்துலக தமிழர்களுக்கும் மறக்கமுடியாததொன்றாகும்!! ■

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
நேற்றிருந்த கவலைகள் முழுக்கக் காணாமல் போகும். திடீரென்று நினைத்துப்பார்க்காத தொகை ஒன்று வரும். மதியத்திற்கு மேல் மனக்கலக்கம் நீங்கி நிம்மதி மீளும்.

**இடபம்**
பேச்சிலும் செயலிலும் கவனமாக இருப்பதால் அருமையான நாள். பழைய பகைவர்கள் கண்காணாமல் போவார்கள். எதிர்பாராத விரயத்தால் ஏற்பட்ட பண நெருக்கடி தீரும்.

**மிதுனம்**
யார் வம்பிலும் தலையிடாமல் இருந்தால் பிரச்னை இருக்காது. ஒரு பயணம் மேற்கொள்வீர்கள். சூழ்நிலை மேம்படும். பண விஷயத்தில் இருந்த கவலை நீங்கும்.

**கடகம்**
ஆரோக்யம் பயமுறுத்தினாலும் விரைவில் சரியாகும். செலவைச் சுலபமாகச் சமாளிப்பீர்கள். பணி நிலை உயரும். பலவித குணங்களை மாற்றி மாற்றி வெளிப்படுத்துவீர்கள்.

**சிம்மம்**
சுத்தமான, ஆரோக்யமான உணவை நேரம் தவறாமல் சாப்பிடுங்கள். இளம் வயதினருக்குத் திருமணம் கூடி வரும். குழந்தை வாய்ப்பு வரும். வெளிநாடு செல்ல வாய்ப்பு வரும்.

**கன்னி**
புத்திசாலித்தனமான செயல் ஒன்றைச் செய்து அசத்துவீர்கள். புதிய சூழலில் நுழைய வேண்டியிருக்கும். எதையும் சமாளிப்பீர்கள். முயற்சி சற்றுத் தள்ளிப்போகும். குழந்தைகளுக்கு வாய்ப்பு வரும்.

**துலாம்**
நன்மை செய்யும் நண்பர் அறிமுகமாவார். பணிவு கூடும். குழந்தைகளை அரவணைத்து மகிழ்ச்சி அளிப்பீர்கள். வெளியூர் செல்லத் திட்டமிடுவீர்கள்.

**விருட்சிகம்**
திட்டம் ஒன்று பல கால முயற்சியால் வெற்றியடையும். நண்பின் சந்திப்பு உண்டு. மனைவி, கணவருக்கு முன்னேற்றம் வரும். பல காலம் கழித்து பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**தனுசு**
சகோதர, சகோதரிகள் அல்லது நண்பர்கள் சந்திப்பு மகிழ்ச்சி தரும். பாராட்டு அதிகரிக்கும். வெற்றி வாய்ப்பு கூடும். முடிந்தவரை பிறர் விஷயத்தில் தலையிடாமல் தவிர்த்து விடுங்கள்.

**மகரம்**
சிறு தொல்லை உண்டு. அலுவலகத்தில் திறமைக்குரிய அங்கீகாரம் குறையலாம். கணவர், மனைவி வீட்டு உறவினருடன் நல்லுறவு உண்டு. தாயாருக்கு நன்மை ஏற்படும். வாழ்வில் உயர்வீர்கள்.

**கும்பம்**
குடும்பத்தில் சிறு விவாதம் வந்து பிறகு அமைதி மீளும். நல்ல காரணத்துக்குக் குடும்பத்தைப் பிரிந்து செல்ல வேண்டி வரலாம். உங்களின் தலைமை குணத்தால் நல்ல விஷயம் நடத்துவீர்கள்.

**மீனம்**
உங்கள் உழைப்பிற்கான பாராட்டைப் பிறர் பெற்ற நிலை மாறும். பரபரப்பு நீங்கும். பேச்சினால் நன்மை வரும். புதியவர்களிடம் பழகும் போது கவனமாக இருங்கள்.


# பா.ஜ.கவுக்கு எதிராக அ.தி.மு.க.வும் தி.மு.க.வும் இணைய வேண்டும்!

## வலியுறுத்துகின்றார் கவிஞர் வைரமுத்து

சென்னை, ஓக. 09

தமிழகத்தில் தி.மு.கவும் அ.தி.மு.கவும்ஒன்று சேரவேண்டும் என்று கவிஞர் வைரமுத்து கூறியுள்ளார். கலைஞரின் மூன்றாவது நினைவு தினமான நேற்று முன்தினம் கலைஞரின் நினைவிடத்துக்கு சென்று மரியாதை செலுத்திய வைரமுத்து அதன் பின் செய்தியாளர்களிடம் பேசினார்.

அப்போது அவர், "கலைஞர் நினைவிடத்தில் நின்று சொல்கிறேன். இந்த முக்கியமான செய்தியை தமிழ் தலைவர் களும், உணர்வாளர்களும் குறித்துக் கொண்டால் மகிழ்ச்சி என்று நினைக்கிறேன். கலைஞருடன் ஒரு நெருக்கமான தனிமையில், நான் கேட்டேன். 'எம்.ஜி.ஆர்.



கழகத்தை விட்டு வெளியே சென்றது உங்களுக்கு என்றைக்காவது வருத்தத்தை ஏற்படுத்தியதுண்டா?'என்று கேட்டேன்.

நீண்ட நேரம் யோசித்து விட்டுச் சொன்னார், "அது ஒரு வகையில் நல்லது. எம்.ஜி.ஆர். பிரிந்திருக்காவிட்டால் அந்த இடத்தில் திராவிடத்துக்கு விரோதமான சக்திகள் இருந்திருக்கக் கூடும். அதனால் அது ஒரு வகையில் நல்லது" என்று கலைஞர் என்னிடம் சொன்னார்.

அதே கருத்தை இன்று நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். திராவிட உணர்வாளர்களும், தமிழ் செம்மல்களும், தமிழகத்தை மேம்படுத்தும் வேண்டும் என்ற சித்தாந்தம் உடையவர்களும் ஒன்றுபட வேண்டிய நேரம் இது.

இல்லையென்றால் எதிர் சக்திகள் எழுந்துவிடக் கூடும் என்று தமிழகம் நினைக்கிறது. ஆகவே எல்லா சக்திகளும், கலைஞரின் பெயரால், அண்ணாவின் பெயரால், ஒன்றுபடவேண்டும் என்று நான் நினைக்கிறேன்" என்று கூறியிருக்கிறார் வைர முத்து.

# திண்டிவனம் ராமமூர்த்தி காலமானார்! முதலமைச்சர் ஸ்டாலின் நேரில் அஞ்சலி

சென்னை, ஓக. 09

தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் முன்னாள் தலைவர் திண்டிவனம் ராமமூர்த்தி (84) உடல்நலக்குறைவால் நேற்று காலை காலமானார். சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள வீட்டில் திண்டிவனம் ராமமூர்த்தியின் உடல் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது . திண்டிவனம் ராமமூர்த்தி மறைவுக்கு அரசியல் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை அவரது உடலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மலர் வைத்து அஞ்சலி செலுத்தினார். அதன் பிறகு திண்டிவனம் ராமமூர்த்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். முதலமைச்சருடன்நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே என் நேரு மருத்துவம் மற்றும் மக்கள் நலத்துறை அமைச்சர் சுப்பிரமணியன் உடன் இருந்தனர்.



# அ.தி.மு.க. புதிய அவைத்தலைவர் யார்? மூத்த நிர்வாகிகள் பெயர்கள் பரிசீலனை

சென்னை, ஓக். 09

அ.தி.மு.க. அவைத் தலைவராக இருந்த மதுசூதனன் மறைவை தொடர்ந்து அந்த கட்சியின் புதிய அவைத் தலைவர் யார்? என்ற கேள்வி ஏழுப்பட்டுள்ளது.

எம்.ஜி.ஆர். காலம் முதல் கட்சியின் மூத்த நிர்வாகிகள்தான் இந்த பதவியில் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். அந்த வரிசையில்



மூத்த நிர்வாகி ஒருவரை புதிய அவைத்தலைவராக நியமிக்க ஆலோசித்து வருகிறார்கள்.

தமிழ் மகன்உசேன், பொன்னையன், தனபால், முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் ஆகியோரது பெயர்கள் பரிசீலனையில் உள்ளது. இவர்களில் யாராவது ஒருவர் அவைத் தலைவராக நியமிக்கப்படுவார்கள்.

# உள்ளாட்சி தேர்தல் தி.மு.க. 100 வீதம் வெற்றி பெற உழைக்க வேண்டும்

## மாவட்ட செயலாளர்களுக்கு மு.க.ஸ்டாலின் அறிவுரை

சென்னை, ஓக. 09

உள்ளாட்சி தேர்தலில் 100 வீதம் வெற்றிக்கு தீவிரமாக உழைக்க வேண்டும் மாவட்ட செயலாளர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுரை வழங்கினார்.

ஸ்டாலின் நேற்று அண்ணா அறிவாலயத்தில் 9 மாவட்ட செயலாளர்களுடன் ஆலோசனை நடத்தினார். இதில் மாவட்ட செயலாளர்களுடன் 9 மாவட்டங்களில் உள்ள எம்.பி.க்கள், எம்எல் ஏ.க்களும் கலந்து கொண்டனர்.

உள்ளாட்சி தேர்தலை பொறுத்தவரை மாவட்ட செயலாளர்கள்தான் வேட்பாளர்கள் பட்டியலை தயார் செய்து தலைமைக்கு அனுப்புவது வழக்கம். அந்த வகையில் வேட்பாளர் பட்டியலை தயார் செய்யும் போது கூட்டணி கட்சிகளையும் அனுசரித்து அவர்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் இடங்களை ஒதுக்கி கொடுக்க வேண்டும் என்று மு.க. ஸ்டாலின் அறிவுரை வழங்கினார்.



# யாழ். இராசதானி அடையாளங்களை புனரமைப்பது தொடர்பில் ஆராய்வு!

யாழ்ப்பாணம், ஓக. 09

யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் ஏற்பாட்டில் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் அழைத்துவரப்பட்டு சங்கிலியன் அரண்மனை, நுழைவாயில், யமுனா ஏரி, மந்திரிமனை ஆகியவற்றை புனரமைப்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

“தற்போது இவற்றை செய்து முடிப்பதற்கான பூர்வாங்க பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விரைவில் இவற்றிற்கான கட்டட வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வெளிவிடுவதற்கு எதிர்பார்த்துள்ளோம். எமது மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு நாம் எடுக்கும் முயற்சிகளக்கு எமது தமிழ் உணர்வாளர்கள் அனைவரினதும் பங்களிப்பை எதிர்பார்த்துள்ளோம்”, என்று யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் இந்த சந்திப்பில் அதன் தலைவர் பேராசிரியர் புஷ்பரட்ணம், செயலாளரான மருத்துவ பீட பதிவாளர் ரமேஷ், மாநகர முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணன், புனர்நிர்மாண அலுவலர் கபிலன், மாநகர சபை உறுப்பினர்களான பார்த்தீபன், தனுயன் மற்றும் கண்டியில் இருந்து வருகை தந்த பண்டைய கட்டட கலைஞர் ஹேரத், அளவை அளவையியலாளர் (quantity surveyor) சரத் சத்குமார, தொல்லியலாளர் மைத்திரிபால, மூத்த புனர்நிர்மான அலுவலர்களான பண்டாரநாயக்க, மேதானந்த ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

# வடக்கில் 77.4 வீதமானவர்கள் தடுப்பூசி பெற்றுகொண்டனர்!

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்



**யாழ்ப்பாணம், ஓக.09**

**வட மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 77.42 வீதமானவர்கள் குறைந்தது ஒரு கோவிட் 19 தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர் என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

மாகாணத்தில் தடுப்பூசி பெறத் தகுதிபெற்ற 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகை 6 இலட்சத்து 57 ஆயிரத்து 547 ஆக உள்ளது. இந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவு வரையான தரவுகளின் பிரகாரம் 5 இலட்சத்து 9 ஆயிரத்து 324 பேர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டனர்.

**யாழ்ப்பாணத்தில்!**

யாழ்ப்பாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 44 ஆயிரத்து 766ஆகக் கணிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு வரை இந்த வயதுப் பிரிவினரில் 2 இலட்சத்து 66 ஆயிரத்து 563 பேர் தடுப்பூசி பெற்றனர். இது இந்த வயதுப் பிரிவினரில் 77.32 வீதமாகும்.

**கிளிநொச்சியில்**

கிளிநொச்சி மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை 72 ஆயிரமாக உள்ளது. இவர்களில் 57 ஆயிரத்து 152 பேர் கோவிட்19 தடுப்பூசி பெற்றுக்கொண்டனர். இது இந்த வயதுப் பிரிவினரில் 79.38 வீதமாகும்.

**முல்லைத்தீவில்**

முல்லைத்தீவில் 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகை 65 ஆயிரமாகும. இவர்களில் 50 ஆயிரத்து 597 பேர் தடுப்பூசி பெற்றுள்ளனர். இது இவ்வயதினரில் 77.84 வீதமாகும்.

**மன்னாரில்**

மன்னாரில் 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகை 77 ஆயிரத்து 781 ஆக உள்ள நிலையில் இவர்களில் 54 ஆயிரத்து 242 பேர் குறைந்தது ஒரு தடுப்பூசியை பெற்றுள்ளனர். இதன்மூலம் மாவட்டத்தில் தடுப்பூசி பெற்றுகொண்ட இவ்வயதுப் பிரிவினரின் வீதம் 69.74 ஆகப் பதிவாகியுள்ளது.

**வவுனியாவில்**

வவுனியாவில் 98 ஆயிரம் பேர் 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 80 ஆயிரத்து 70 பேர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். இது மாவட்டத்தின் 30 வயதுக்கு மேற்பட்ட பிரிவினரில் 82.42 வீதமாகும். (ஐ)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலால் நெடுந்தீவில் 2 கோடி ரூபாய் நட்டம்!

## அமைச்சர் டக்ளஸிடம் கடற்றொழிலாளர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 09

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயல்பாடுகளால் கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் நெடுந்தீவு கடற்றொழிலாளர்களுக்கு இரண்டு கோடியே 13 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் சமாசங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்கள் மற்றும் சங்கங்களின் பிரதிநிதிகள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று சந்தித்தன. இதன்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இந்தியக் கடற்றொழிலார்களின் அத்துமீறல் முழுமையாக கட்டுப்படுத்தப்பட வேண்டும். சுருக்கு வலை, உள்ளூர் இழுவைப் படகு, வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடித்தல், குழை போட்டு மீன் பிடித்தல் போன்ற சட்டவிரோத தொழில் முறைகளை கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்த வேண்டும் என கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் முன்வைத்தனர்.



அத்துடன், புரவி புயலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நஷ்டஈடு பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த கடற்றொழல் அமைச்சர், கடல் தொழில் நடவடிக்கைகளை நாடளாவிய ரீதியில் ஒழுங்குபடுத்தும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்படவுள்ள ஒழுங்கு விதிகளில், யாழ். மாவட்டத்தில் மூன்றரை இஞ்சி வலையைப் பயன்படுத்தி 16 கடல் மைல்களுக்கு அப்பால் சுருக்கு வலை தொழிலில் ஈடுபட அனுமதியளிப்பது தொடர்பாக பிரஸ்தாபித்தார்.

இதேபோன்று, இந்தியக் கடற்றொழிலாளர்களின் சட்டவிரோதச் செயல்பாடுகளுக்கு இன்னும் சில மாதங்களில் நிரந்தரமான தீர்வு பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தனியார் கடலட்டை ஏற்றுமதியாளர் ஒருவரின் ஒத்துழைப்புடன் பிரதேச மக்கள் நன்மைகளை பெற்றுக்கொள்ளும் வகையிலான நிபந்தனைகளுடன் கடலட்டை பிடிப்பதற்கான அனுமதியை வழங்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, தீவகத்தினை சேர்ந்த கடற்றொழில் சங்கங்கள் பண்ணை முறையில் கடல் அட்டை, மீன், நண்டு மற்றும் இறால் வளர்ப்பில் ஈடபடுவதற்கு விரும்புமாயின் ஒவ்வொரு சங்கத்திற்கும் தலா பத்து ஏக்கர்களை ஒதுக்கித் தருவதாகவும் அமைச்சர் உறுதியளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சந்நிதி முருகன் ஆலய சூழலில் இரு வியாபாரிகளுக்கு தொற்று!

வடமராட்சி, ஓக. 09

தொண்டைமானாறு சந்நிதி முருகன் ஆலய சூழலில் கச்சான் வியாபாரிகளுக்கு நடத்தப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனைகளில் இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வரலாற்று பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய பெருந்திருவிழா நேற்று ஆரம்பமானது.

இந்தநிலையில், ஆலய சூழலில் கச்சான் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 36 பேருக்கு பி. சி. ஆர். சோதனை நடத்தப்பட்டது. இதில் இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து தொற்றாளர்களும் அவர்களுக்கு நெருக்கமானவர்களும் உடனடியாகத் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதேவேளை, ஆலயத்துடன் தொடர்புடைய 75 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 25 பேரின் மாதிரிகள் பரிசோத னைக்கு போதுமானதாக இல்லை என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. (ஐ-02)

# வடக்கு கல்வி திணைக்களத்தின் கணனிகள் கொள்வனவில் ஊழல்!

## கூறுவிலை கோரல் வழங்கிய நிறுவனமொன்று முறையீடு

யாழ்ப்பாணம், ஓக. 09

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று கூறுவிலை கோரல் வழங்கிய நிறுவனம் ஒன்று வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர்.

அந்தக் கடிதத்தின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர் உள்ளிட்ட ஐவருக்கு பிரதியிடப்பட்டுள்ளன.

மேலும் அந்தக் கடிதத்தில், வடக்கு மாகாண கல்வித்திணைக்களம் கோரிய கூறு விலை பிரகாரம் 240 கணனிகள் கொள்வனவு செய்யும் கோரிக்கையை நூறு வீதம் எமது நிறுவனம் நிறைவு செய்துள்ளதோடு, ஏனையவர்களை விட விலையும் எங்களுடையதே குறைவானதாகவும் இருந்தது.

ஆனால், 16.07.2021 திகதிய கொள்வனவு கடிதத்திற்கு அமைவாக எங்களின் விலையைவிட ஒரு கணனிக்கு 11 ஆயிரத்து 500 ரூபாய் அதிக விலையைக் கொண்ட வழங்குனரிடம் கொள்வனவு செய்ய கொள்வனவு கட்டளை அனுப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 11 ஆயிரத்து 500 வீதம் 240 கணனிகளுக்கும் 27 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் அதிகமாக செலுத்தப்படவுள்ளதாக அந்தக்கடிதத்தில் சுட்டிக்காட்டுப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் ஒருவரை தொடர்பு கொண்டு வினவிய போது, இந்த விடயம் தொடர்பில் எமக்கும் கடிதம் கிடைப்பெற்றது. எனவே, இது தொடர்பான விளக்கம் ஆளுநருக்கு அனுப்பட்டுள்ளது. 240 கணனிகள் கொள்வனவு விடயத்தில் முறைப்பாடு செய்தவரிடம் கணனிகள் கொள்வனவு செய்வதற்கு பொருத்தமற்றவர் என தொழிநுட்ப குழு பரிந்துரைத்துள்ளது.

எனவே, தொழிநுட்ப குழுவின் பரிந்துரைக்கு அமைவாகவே கொள்வனவு இடம்பெற்றது எனத் தெரிவித்தார். (ஐ)

# பிதிர்கடன் செலுத்த கீரிமலையில் கூடியவர்களுக்கு அன்ரிஜென்!

யாழ்ப்பாணம், ஓக. 09

ஆடி அமாவாசை விரத தினமான நேற்று பிதிர் கடன் செலுத்துவதற்காக கட்டுப்பாடுகளை மீறி கீரிமலை கடற்கரையில் குவிந்தவர்கள் அன்ரிஜென் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

கொரோனா தொற்றுப் பரவல் அபாய நிலையை எட்டியதைத் தொடர்ந்து பிதிர் கடன் நிறைவேற்ற கீரிமலைக்கு வரவேண்டாமென நேற்று அறிவிக்கப்பட்டது. சைவ அமைப்புக்களும் இது குறித்து பகிரங்கமாக அறிவித்திருந்தன.

எனினும், இந்த அறிவித்தல்களை மீறி பலர் அந்தப் பகுதியில் குவிந்தனர். இதனால், அவர்களுக்கு அன்ரிஜென் பரிசோதனை நடத்தப்பட்டது. (ஐ)

# 2ஆவது தடுப்பூசி ஏற்றும்பணி மன்னாரில் இன்று ஆரம்பம்!

மன்னார்,ஓக.09

**மன்னார் மாவட்டத்தில் கடந்த ஜூலை மாதம் சினோபார்ம் தடுப்பூசியின் முதல் டோஸ் பெற்றவர்களுக்கு இரண்டாவது டோஸ் ஏற்றும் பணி இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்து வர் ரி.வினோதன் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஜூலை 5 ஆம், 6 ஆம், 7 ஆம் திகதிகளில் சினோபார்ம் தடுப்பூசியின் முதல் டோஸ் பெற்றுக் கொண்டவர்களுக்கான 2ஆவது டோஸ் இன்று திங்கட்கிழமை முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்தவர்களுக்கு இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் மதியம் ஒரு மணி வரை மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை மற்றும், பேசாலை சென். மேரிஸ் கல்லூரி ஆகியவற்றில் வழங்கப்படவுள்ளது.

அத்துடன், இன்று மாலை 2 மணி முதல் 4.30 மணி வரை எருக்கலம்பிட்டி பிரதேச மருத்துவமனை, மற்றும் தலைமன்னார் றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆகியவற்றில் சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்கப்படவுள்ளது.

இதேபோன்று மாந்தை மேற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்கப்படும். அத்துடன், முசலி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் காலை 8 மணி முதல் சினோபார்ம் 2ஆவது டோஸ் வழங்கப்படவுள்ளது.

நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் வங்காலை புனித ஆனாள் தேவாலயத்திலும், நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நானாட்டான் டிலாசால் பாடசாலையிலும், பிற்பகல் 1.30 மணி முதல் 4 மணி வரை முருங்கனில் அமைந்துள்ள நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்கப்படவுள்ளது.

இதேசமயம், நாளை செவ்வாய்க்கிழமை மடு ஆலயத்திற்கு அருகில் உள்ள வைத்தியசாலையில் காலை 8 மணி முதலும், இரணையிலுப்பைக்குளம் ஆரம்ப சுகாதார வைத்தியசாலையிலும் காலை 8 மணி முதல் சினோபார்ம் தடுப்பூசியின் 2 ஆவது டோஸ் வழங்கப்படவுள்ளன.

எனவே, கடந்த மாதம் சினோபாம் தடுப்பூசியின் முதலாவது டோஸைப் பெற்றுக்கொண்ட அனைவரும் தடுப்பூசி அட்டையையும், தேசிய அடையாள அட்டையையும் தவறாது எடுத்து வந்து இரண்டாவது டோஸ் தடுப்பூசியை பெறுமாறு மருத்துவர் வினோதன் மேலும் கேட்டுக்கொண்டார். (ஐ)

# விபத்தில் படுகாயமடைந்த விசுவமடு இளைஞர் மரணம்!

முல்லைத்தீவு, ஓக. 09

விசுவமடு சந்திப் பகுதியில் மோட்டார் சைக்கிள் - ஹைஏஸ் வாகனம் மோதிய விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் சிகிச்சை பலனின்ற உயிரிழந்தார்.

விசுவமடு மாணிக்கபுரத்தை சேர்ந்த 19 வயதான சசிக்குமார் தனோஜிகன் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞர் கடந்த, ஜூலை 29ஆம் திகதி மோட்டார்சைக்கிளில் சென்ற போது ஹைஏஸ் வானுடன் மோதி விபத்துக்கு உள்ளானார்.

உடனடியாக தருமபுரம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளைஞர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துமவனைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்ற நிலையில், நேற்று முன்தினம் அவர் உயிரிழந்தார் என்று தெரிய வருகின்றது. (ஐ)

# வன்னி மாவட்ட மருத்துவர்கள் சிலர் 2 மணிநேரத்தில் வீடு செல்கின்றனர்!

## சாடுகின்றார் திலீபன் எம்.பி.

வவுனியா, ஓக. 09

வன்னியில் சில மருத்துவமனைகளின் மருத்துவர்கள் இரண்டு மணித்தியாலங்களில் வீட்டுக்கு திரும்பி செல்கின்றனர். இது தொடர்பில் குழு ஒன்றை அமைத்து விசாரிக்க வேண்டும் என்று கு. திலீபன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

சுகாதாரத் துறை இராஜாங்க அமைச்சரிடம் வன்னியின் சுகாதாரத் துறை தொடர்பில் கலந்துரையாடிய விடயங்கள் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வவுனியா மாவட்டத்தில் மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. அதுபோல் தாதியர் பற்றாக்குறையும் நிலவுகின்றது. இவற்றை விரைவாக நிரப்பினால் மக்களுக்கு உதவியாக இருக்கும்.

வன்னி மாவட்டத்தில் சில மருத்துவர்கள் 11 மணிக்கு மருத்துவமனைக்கு சென்று, இரண்டு மணித்தியாலங்களில் வீட்டுக்கு திரும்பி விடுகின்ற நிலையும் உள்ளது. இது தொடர்பில் குழு ஒன்றை அனுப்பி திடீர் ஆய்வுகள் மேற்கொண்டால் சிறப்பாக இருக்கும்.

எமது கோரிக்கைக்கு ஏற்ப வவுனியா பொது மருத்துவமனைக்கு 25.1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இருப்பினும்,அதனை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டடங்கள் திணைக்களம் மற்றும் மாகாண கட்டடங்கள் திணைக்களம் என்பன இதுவரை எவ்வித வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை.

கடந்த அரசாங்கம் நிதிகளை திருப்பி அனுப்பியதைப் போன்று அல்லாது எமது அரசாங்கத்தில் இந்த வேலைத் திட்டத்தை தாங்கள் முடித்து வைக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சரிடம் வலியுறுத்தினேன் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)



# இரட்டை மாட்டுவண்டி சவாரி மன்னாரில் சிறப்பாக நடந்தது!

மன்னார், ஓக. 09

தமிழர்களின்பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான இரட்டை மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி மன்னாரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட இரட்டை மாட்டு வண்டி சவாரி சங்கத்தின் ஏற்பாட்டில், மன்னார் - முருங்கன் வாழ்க்கைபெற்றான் கண்டல் இரட்டை மாட்டு வண்டி சவாரி திடலில் இடம்பெற்றது.

இதில், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 40 ஜோடி காளைகள் போட்டியில் பங்குபற்றின. இரட்டை மாட்டு வண்டி சவாரி போட்டியானது 5 பிரிவுகளாக நடைபெற்றது. இதன் போது 'ஏ' பிரிவில் முதலாம் இடத்தை உயிலங்குளத்தை சேர்ந்த பிரின்சியன், இரண்டாம் இடத்தை காத்தான்குளத்தைச் சேர்ந்த தங்கராசா, மூன்றாம் இடத்தை வாழ்க்கை பெற்றான் கண்டலை சேர்ந்த சிந்தாத்துரை ஆகியோரின் காளைகள் வெற்றி பெற்றன.

'பி' பிரிவில் முதலாம் இடத்தை நொச்சிக்குளத்தை சேர்ந்த செல்வகுமார், இரண்டாம் இடத்தை உயிலங்குளத்தைச் சேர்ந்த பிரின்சியன், மூன்றாம் இடத்தை சிறுகண்டலைச் சேர்ந்த கென்றிகாவும், 'சி' பிரிவில் முதலாம் இடத்தை பூவரசன் குளத்தைச் சேர்ந்த நியாஸ், இரண்டாம் இடத்தை பிடாரி குளத்தைச் சேர்ந்த நியூரன், மூன்றாம் இடத்தை பிச்சை குளத்தைச் சேர்ந்த விஜயன் ஆகியோர்களின் காளைகள் வெற்றிபெற்றன.

'டி' பிரிவில் முதலாம் இடத்தை சிறுகண்டலை சேர்ந்த கென்றிகா, இரண்டாம் இடம் மணற்குளத்தைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை, மூன்றாம் இடத்தை உயிர்த்தராசன் குளத்தை சேர்ந்த அஜந்தன், 'ஈ' பிரிவில் 1 ஆம் இடத்தை நானாட்டானை சேந்த குகன், 2 ஆம் இடத்தை பிச்சை குளத்தைச் சேர்ந்த ரூபராஜ், 3 ஆம் இடத்தை வட்டக்கண்டலைச் சேர்ந்த அஜித்குமார் ஆகியோரது காளைகளும் வெற்றி பெற்றன. (ஐ)

# மன்னாரில் எட்டுநாட்களில் 130 தொற்றாளர் அடையாளம்!

மன்னார், ஓக. 09

மன்னார் மாவட்டத்தில் சனிக்கிழமை 13 புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இதன் மூலம் கடந்த 8 நாட்களில் மட்டும் 130 தொற்றாளர்கள் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டனர் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், மாவட்டத்தில் இந்த வருடம் 1,154 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதுவரை மாவட்டத்தில் மொத்தமாக 1,171 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் இது வரை 10 கொரோனா மரணங்கள் நிகழந்தன. நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட 13 கொரோனா தொற்றாளர்கள் பேசாலை, தலைமன்னார், மூர்வீதி, சாவக்காடு, சாந்திபுரம், எழுத்தூர், நானாட்டான், முருங்கன் போன்ற பகுதிகளை சேர்ந்தவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் - என்றும் கூறினார்.



# முசலியில் நிர்மாணிக்கப்பட்ட யாகப்பர் ஆலயம் திறப்பு

மன்னார், ஓக. 09

மன்னார் மறைமாவட்டத்தின் முசலி - கொக்குப்படையானில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புனித யாகப்பர் ஆலயம் நேற்றுமுன்தினம் மாலை மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் அபிஷேகம் செய்து திறந்து வைக்கப்பட்டது.

கொக்குப்படையான் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை டெஸ்மன் அஞ்சலோ தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை ஆலயத்தை ஆசிர்வதித்து திறந்து வைத்து அபிஷேகம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், அருட்தந்தையர்கள், கிராம மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

ஈழநாடு



# இராமகிருஷ்ண மிஷனில் 42 பேருக்கு கொரோனா!

## மடம் தற்காலிகமாக மூடப்பட்டது

மட்டக்களப்பு, ஓக.09

**மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனில் துறவிகள் இருவர் உட்பட 42 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதை அடுத்து மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மடம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.**

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் நேற்று முன்தினம் 75 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். இந்த நிலையில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் 42 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக கொரோனா தொற்றாளர்கள் அதிகளவில் இனங்காணப்பட்ட நிலையில் மட்டக்களப்பு மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் 75 கொரோனா தொற்றாளர்கள் இனங் காணப்பட்டனர் என்று மட்டக்களப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு பொறுப்பான மருத்துவர் கே. கிரிசுதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடியில் உள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனின் துறவிகள் இருவர் உட்பட 42பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்ட நிலையில், ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் தற்காலிகமாக மூடப்பட்டதுடன், அதனுடன் தொடர்புபட்டவர்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இதேநேரம் நேற்றுமுன்தினம், மட்டக்களப்பு சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவில் பல பகுதிகளில் தொடர்ச்சியாக அன்ரிஜென், பி. சி. ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன என்றும் மருவத்துவர் கிரிசுதன் தெரிவித்தார்.

இதன்போது மாமாங்கம் பகுதியில் 21 தொற்றாளர்களும், புளியந்தீவு பகுதியில் 09 தொற்றாளர்களும் நாவற்குடா கிழக்கு பகுதியில் 12 தொற்றாளர்களும், மஞ்சந்தொடுவாய் பகுதியில் 06 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டனரெனவும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றாவிட்டால் மட்டக்களப்பில் கொரனா தொற்று பாரியளவில் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றும் பொதுமக்களை அவதானமாக செயல்படுமாறும் சுகாதார பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஐ)

# சட்டவிரோத மணல் அகழ்வு: வாகனேரியில் இருவர் கைது

மட்டக்களப்பு, ஓக. 09

வாகனேரியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டுவந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்கள் பயன்படுத்திய வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாகனேரி பகுதியில் நேற்று முன்னதினம் இரவு சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்டிருந்தனர். இது தொடர்பாக இருவர் தொடர்பாக மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவிற்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய, பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரையின் கீழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ். பி.பண்டார தலைமையிலான குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் குழுவினர் சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

இதன்போது, இருவர் கைது செய்யப்பட்டனர். அத்துடன், மணல் அகழப் பயன்படுத்தப்பட்ட பெக்கோ இயந்திரம், டிப்பர் வாகனம் என்பவையும் கைப்பற்றப்பட்டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்களை வாழைச்சேனை சுற்றுலா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஓட்டமாவடியில் 34 உடலங்கள் நல்லடக்கம்

மட்டக்களப்பு, ஓக. 09

ஓட்டமாவடியில் மேலும் 34 கோவிட்-19 சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக உயிரிழக்கும் சடலங்கள் கிழக்கு மாகாணம் ஓட்டமாவடியிலுள்ள சூடுபத்தினசேனையில் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில் நேற்றுமுன்தினம் மேலும் 34 கோவிட்-19 சடலங்கள் அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதையடுத்து இதுவரை 1,415 கோவிட்-19 சடலங்கள் அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சம்மாந்துறை சிறுவர் இல்லத்தில் ஆறு சிறுவர்களுக்கு கொரோனா

சம்மாந்துறை, ஓக. 09

சம்மாந்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சிறுவர் இல்லம் ஒன்றில் முகாமையாளர் மற்றும் ஆறு சிறுவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சிறுவர் இல்லத்தில் 10 சிறுவர்கள் தங்கியிருந்துள்ளனர். இந்நிலையில், அங்கு பணிபுரியும் காரைதீவைச் சேர்ந்த இல்ல மேற்பார்வையாளருக்கு நேற்று முன்தினம் காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து, அவர் அன்ரிஜென் சோதனை செய்துகொண்டார்.

இன்போது, அவருக்கு கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டது. அதனையடுத்து சுகாதா துறையினர், அவரை அட்டாளைச்சேனை ஆயுர்வேத கோவிட் - 19 வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் சிறுவர் இல்லத்துக்குச் சென்ற சுகாதாரத் துறையினர், அங்குள்ள 10 சிறுவர்களுக்கும் மற்றும் சமையலாளுக்கும் அன்ரிஜென் சோதனை செய்தனர். இதன்போது ஆறு சிறுவர்களுக்கு கொரோனா தொற்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் மருத்துவர் குண.சுகுணனின் உத்தரவின்பேரில், மேற்படி சிறுவர் இல்லத்தை மூடி, அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். 10 நாள்களின் பின்னர் மீண்டும் அன்ரிஜென் சோதனை செய்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# தீ மிதிப்பு சடங்கு நடத்திய ஆலயம் மீது நடவடிக்கை

மட்டக்களப்பு, ஓக. 09

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி மக்களை ஒன்று கூட்டி தீ மிதிப்பு சடங்கு நடத்திய செங்கலடி ஐயங்கேணி வைரவர் கோயில் நிர்வாகத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் பொலிஸ், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

அந்த ஆலயத்தின் வருடாந்தத் தீ மிதிப்பு சடங்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது, ஏராளமான மக்கள் ஒன்றுகூடியிருந்தனர். இதையடுத்து அப்பகுதியை சுற்றிவளைத்த பொலிஸார், பொதுச்சுகாதார பரிசோதகர்கள் கூடியிருந்த மக்களை கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தினர்.

இதைத் தொடர்ந்து ஆலய நிர்வாகத்தினரிடம் வாக்கு மூலத்தை பதிவு செய்ததுடன், அவர்களுக்கு எதிராக வழக்கும் தொடுத்துள்ளனர். (ஐ)

# மயங்கி வீழ்ந்தவர் மரணம்!

மட்டக்களப்பு, ஓக. 09

தேற்றாதீவு பகுதியில் மயங்கி வீழ்ந்து கிடந்த ஒருவர் உயிரிழந்தார். இவ்வாறு உயிரிழந்தவர் குறித்து எந்தத் தகவலும் தெரியவரவில்லை என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி தேற்றாதீவு பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் ஒருவர் மயங்கிய நிலையில் கிடந்தமை அவதானிக்கப்பட்டது.

ஆனால், அப்பகுதியில் நின்ற மக்கள் எவரும் அவரை மீட்க முன்வரவில்லை. இந்நிலையில் விடயமறிந்து அந்த இடத்துக்கு வந்த அப்பகுதி கிராமசேவையாளரும், பொலிஸாரும் அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தார்.

எனினும் அவர், அங்கு சிகிச்சை பலனின்றி சனிக்கிழமை இரவு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

# காலநிலை மாற்றத்தால் மீன்பிடி பெரிதும் பாதிப்பு!

## அம்பாறை மீனவர்கள் கவலை

அக்கரைப்பற்று, ஓக. 09

அம்பாறை மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் மீன்களின் பிடிபாடு குறைவடைந்துள்ளது. இதனால், தாம் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்வதாக அந்தப் பிரதேச மீனவர்கள் தெரிவித்தனர்.

பெரிய நீலாவணை முதல் பொத்துவில் பகுதி வரையுள்ள கடற்பரப்பு உள்ளிட்ட கடற்பிராந்தியத்தில் மீன்களின் பிடிபாடு பெருமளவில் குறைவடைந்துள்ளது. சடுதியாக ஏற்பட்ட சீரற்ற காலநிலை மற்றும் நிலவு வெளிச்சம் போன்ற காரணங்களாலேயே மீன்களின் பிடிபாடு வெகுவாகக் குறைவடைந்துள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சந்தைகளில் மீன்களின் விலைகளும் சடுதியாக உயர்வடைந்துள்ளன. அத்துடன் சந்தைகளில் மீன்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கடலில் குளித்த இளைஞர் மரணம்!

கிண்ணியா, ஓக. 09

நண்பர்களுடன் கடலில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

கிண்ணியா - பைசல்நகர் தாமரைவில் பகுதியை சேர்ந்த மௌஜ/த் பர்ஸான் (18 வயது) என்பவரே உயிரிழந்தவராவார்.


குறித்த இளைஞரும் வேறு மூன்று இளைஞர்களும் கிண்ணியா உப்பாறு பாலம் அருகே கடலில் குளித்துக் கொண்டிருந்தனர். அச்சமயம் நீந்த முடியாத அந்த இளைஞரை கடல் அலை அடித்துச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இதையடுத்து அப்பகுதி மக்களும், கடற்படையினரும் அவரை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். எனினும், அவரின் சடலமே மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

# இலட்சக் கணக்கானோரை பாதிக்கும் கொரோனா கால 'வேலையிழப்புகள்'

கிருபாகரன்




கொரோனா என்னும் கொடிய வைரஸின் தாக்கம் உலகெங்கும் கட்டுக்கடங்காது பரவி ஒட்டுமொத்த உலகையுமே வீட்டுக்குள் முடக்கிவைத்துள்ளதுடன், உலக பொருளாதாரத் தையே குழி தோண்டிப் புதைத்து வருகின்றது. வல்லரசு நாடுகளில் தொடங்கி வளரும் நாடுகள்வரை, பணம் கொழிக்கும் நாடுகளிலிருந்து பட்டினி கிடக்கும் நாடுகள் வரை இந்த வைரஸிடமிருந்து தப்பவில்லை. பணக்காரர்கள் முதல் அன்றாடம் கூலி வேலைக்கு சென்று வாழ்க்கை நடத்துபவர் வரை கதற விட்டுள்ள இந்த கொரோனா வைரஸ் , 40 இலட்சத்துக்கும் மேற்பட் டோரின் உயிர்களை காவு வாங்கியதுடன் கோடிக்கணக்கானவர்களின் வாழ்க்கையை புரட்டிப் போட்டுள்ளது. இந்த கோவிட்-19 என்ற உலகளாவிய கொரோனா வைரஸ் தொற்று உலகப்போர்- 2 இன் பின்னரான மிகக் கடுமையான உலகளாவிய நெருக்கடியாக மாறிவிட்டது. இதனால் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள பொருளாதார அழிவைப் போன்றே இலங்கையின் பொருளாதாரமும் மோசமான அழிவை சந்தித்து வருகின்றது.

இலங்கையில் 1 ஆவது கொரோனா அலையின் வைரஸ் தொற்று கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் திகதி அடையாளம் காணப்பட்டது. சீனா நாட்டை சேர்ந்த பெண்ணொருவரே இந்த வைரஸ் தொற்றுக்கு முதல் முதலாக இலங்கையில் இலக்காகியிருந்தார். அதனைத் தொடர்ந்து, கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான முதலாவது இலங்கையர் இத்தாலியில் 2020 பெப்ரவரி இரண்டாம் திகதி அடையாளம் காணப்பட்டதாக இத்தாலிக்கான இலங்கை தூதரகத்தின் பதில் கொன்ஷல் ஜெனரல் பிரபாஷினி பொன்னம்பெரும உறுதிப்படுத்தியிருந்தார். இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான முதலாவது இலங்கையர், இலங்கைக்குள் 2020 மார்ச் 11 ஆம் திகதி அடையாளம் காணப்பட்டார். சுற்றுலா வழிக்காட் டியாக பணியாற்றிய 52 வயதான ஒருவரே இந்த வைரஸ் தொற்றுக்குள்ளா கியிருந் தார். அத்துடன் 2020 மார்ச் 28 ஆம் திகதி இலங் கையில் முதலாவது கொரோனா மரணம் பதிவானது. இலங்கையில் கொரோனா 1ஆவது அலை 2020 மார்ச் 11 ஆம் திகதி உருவாகி 2020 ஒக்டோ பர் 4 ஆம் திகதி வரை யான 9 மாதங்கள் நீடித்து ஓய்ந்தது

இவ்வாறான சூழலில் 2020 ஒக்டோபர் 4 ஆம் திகதி மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலை யில் ஆரம்பித்த கொரோனாவின் 2ஆவது அலை கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதிவரை அடித்து ஓய்ந்தது. இந்நிலையிலேயே இலங்கையில் கொரோனாவின் 3 ஆவது அலை கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி முதல் தொடங்கி இன்று வரை இலங்கையரை மிக மோசமாக பாதித்து வருகின்றது. 2020ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து இன்றுவரை நாம் கேட்கும் செய்திகள் எல்லாம் தொற்று, மரணம், நாடு முடக்கம், கிராமங்கள் முடக்கம், பயணத்தடை, தனிமைப்படுத்தல், வேலையிழப்பு, அதனால் வருமானம் இழப்பு, வாழ்வாதாரப்போராட்டம் பசி. பட்டினி என்பவையாகவே உள்ளன.

இலங்கையை வதைத்த கொரோனா அலை-1, கொரோனா அலை - 2 மற்றும் தற்போது வதைத்து வரும் கொரோனா அலை -3 ஆகியவற்றால் நாட்டில் தனியார் துறையினரும், தனியார் துறை ஊழியர்களும் நடுத்தர மற்றும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களுமே மிக மோசமான இழப்புக்களையும் பாதிப்புக்களையும் சந்தித்து வருகின்றனர். இதில் நாம் தனியார் துறையினர் எதிர் கொண்டுள்ள வேலையிழப்புக்கள்,பாதிப்புக்கள் தொடர்பில் மட்டும் பார்ப்போம்.

வளரும் நாடுகளில், மக்கள் தொகையும் கல்வியும் அதிகமாகும்போது வேலைவாய்ப்பின்மையும் அதிகமாகும். அறிவியல் வளர்ச்சியால் கருவிகளின், இயந்திரங்களின் ஆளுமையும் பயன்பாடும் அதிகமாகும் போது, மனித உழைப்பு தேவைப்படாததால் வேலைவாய்ப்பு குறைந்து போகும்.ஆனால், தற்போது கொரோனா வைரஸ் என்னும் தொற்று நோயால் ஒவ்வொரு நாடுகளும் ஊரடங்கு, பயணத்தடைகளை அமுல்படுத்துவதால் வேலைவாய்ப்புகள் மட்டுமன்றி இருந்த வேலைகளும் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இலங்கை அரச துறையில் மொத்த அரசு ஊழியர்களின் எண்ணிக்கை 1.1 மில்லியனுக்கும் அதிகமாக உள்ளது. அதேவேளை இலங்கையில் சுமார் 3.4 மில்லியன் தனியார் துறை ஊழியர்கள் உள்ளனர், அத்துடன் 2.7 மில்லியன் பேர் சுயதொழில் முயற்சியாளர்களாக இருப்பதுடன் 200,000 க்கும் அதிகமானோர் தனியார் துறை முதலாளிகளாகவும் உள்ளனர். சுருக்கமாக கூறினால் இலங்கை தொழிலாளர்களில் 60 சதவீதத்துக்கும் அதிகமானோர் தினசரி சம்பளம் பெறுபவர்களாகவேயுள்ளனர். இலங்கையைப் பொறுத்தவரையில் தனியார் துறை என்னும் போது ஆடைத் தொழிற்சாலைகள், கைத்தொழில் பேட்டைகள், வர்த்தகத்துறை , தோட்டத்துறை , ஊடகத்துறை சுற்றுலாத் துறை, தனியார் போக்குவரத்துத்துறை, கட்டுமானத் துறை போன்றவை முன்னிலை பெறுகின்றன. மேற்சொன்ன துறைகள் தவிர அனைத்து தனியார் துறைகளும் அவற்றின் தன்மைக்கேற்ப பெரும் தாக்கங்களை சந்தித்துள்ளன . இவற்றில் பணிபுரியும் ஊழியர்கள்தான் இலட்சக்கணக்கில் வேலைவாய்ப்புக்களை, வருமானங்களை இழந்து தற்போது நிர்க்கதிக்கு ஆளாகியுள்ளனர்.

"ஒரு நிறுவனம் ஆட்குறைப்பு செய்யும்போது நீங்கள் கடைசி ஆளாக இருக்க வேண்டும். ஒரு நிறுவனம் பதவி உயர்வுக்குப் பணியாளர்களைப் பரிசீலிக்கும்போது நீங்கள் முதல் ஆளாக இருக்க வேண்டும்." -இதுதான் நிறுவனங்களில் ஆளணி முகாமையாளர்கள் ஊழியர் களுக்குச் சொல்லும் மிக முக்கியமான அறிவுரை. இந்த அறிவுரையின் முக்கியத்துவம் என்ன என்பதை இன்று சகல தனியார் துறை பணியாளர்களும் உணரும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுக்க அரசு அறிவித்த பயணத்தடை,முடக்க அறிவிப்புக்களினால் தனியார் தொழில் நிறுவனங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கொரோனா வைரஸின் தாக்கத்தினாலும் நிலவிவரும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவும் பணியாளர்களை பணிநீக்கம் செய்தல், தன்னார்வ ஓய்வு மற்றும் அடிப்படை சம்பள அளவை குறைத்தல், சிறப்பு சலுகைகளை இரத்து செய்தல் போன்ற நடவடிக்கைகளை இலங்கையின் தனியார் துறை நிறுவனங்கள் முன்னெடுத்து வருகின்றன. அவை தேவையென்றால் குறைந்த ஊதியத்துக்கு குறைந்த அளவுக்குப் புதியவர்களை எதிர்காலத்தில் தேவைப்படும்போது எடுத்துக்கொள்ளும் திட்டத்தில் உள்ளன. அத்துடன் 'வீட்டிலிருந்தே வேலை' என்ற கொரோனா கால நடைமுறையில் பாதி ஆட்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு, அவ்வேலையும் மற்றவர் தலையில் சுமத்தப்பட்டு ஒன்றரை மனித உழைப்பை ஒரு மனிதனிடம் தனியார் துறையினர் சுரண்டும் நடவடிக்கையும் இடம்பெறுகின்றது.

எதிர்பாராத இந்த பொருளாதார இழப்பை ஈடு செய்யவும் தங்களுடைய இலாபத்தை தக்கவைத்துக் கொள்ளவும் ஆட்குறைப்பு மற்றும் சம்பளக் குறைப்பில் தனியார் நிறுவனங்கள் ஈடுபடத்தொடங்கியுள்ளன. இதற்கு கொரோனா வைரஸின் தாக்கம், அதனால் அரசு அமுல்படுத்தும் பயணத்தடை, முடக்கம் போன்றவை மட்டுமே காரணமில்லை. இதற்கு மற்றொரு மறைமுக காரணமும் இருக்கிறது. அதாவது கொரோனாவுக்கு முன்னரான காலப்பகுதியிலேயே பல தனியார் நிறுவனங்கள் தமது ஊழியர்களை ஆட் குறைப்பு செய்ய விரும்பியபோதும் அதற்கான வாய்ப்புக்கள் இருக்காத நிலையிலேயே தற்போது இவ்வாறான நிறுவனங்களுக்கு இந்த கொரோனா கை கொடுத்துள்ளது. அதனால் கண்ணை மூடிக்கொண்டு ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வோர் மற்றும் நிரந்தர ஊழியர்கள் அல்லாதோரை உடனடியாகவே வேலையை விட்டு தூக்கும் இந்த நிறுவனங்கள் நிரந்தர ஊழியர்களின் சம்பளத்தில் 10,20,50 வீதம் என்ற கணக்கில் குறைப்பு செய்கின்றன.

இதேவேளை கொரோனாவால் வேலை இழப்போரில் பெண்களே அதிகமாகவுள்ளனர். கொரோனா நெருக்கடி கால ஆட்குறைப்பு நடவடிக்கைகளில் ஒரு நிறுவனத்தில் 10 பேர் நீக்கப்படுகிறார்கள் என்றால் அவர்களில் 6 பேர் பெண்களாகவே இருக்கிறார்கள். குறைந்த சம்பளங்களில் பெண்களை வேலைக்கமர்த்தலாம் என்ற நிறுவனங்களின் எண்ணப்பா ட்டால் பெரும்பாலான தனியார் நிறுவனங்களில் அதிகளவான பெண்களே வேலைகளுக்கு உள்வாங்கப்பட்டிருந்தனர். இதனால் தனியார் நிறுவனங்களில் பெண் ஊழியர்களின் எண்ணிக்கையே அதிகமாவுள்ளதனால் வேலைநீக்கம் செய்யப்படும் போதும் பெண்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கை காரணமாக அமுல் படுத்தப்படும் பயணத்தடை மற்றும் முடக்கத்தால் தனியார் துறையினர் மட்டுமன்றி கலைஞர்கள், சுய தொழில் முயற்சியாளர்கள், விவசாயிகள், சில்லறை வியாபாரிகள், எனப்பலதரப்பட்டவர்களும் தொழில்வாய்ப்பை இழந்துள்ளனர். குறிப்பாக பயணத்தடையுடன் மக்கள் ஒன்று கூடும் நிகழ்வுகள், சுப நிகழ்ச்சிகள், கோவில் திருவிழாக்கள் நடத்த தடை விதிக்கப்படுவதனால் இவற்றை நம்பி வாழும் பலர் குறிப்பாக இசைக் கலைஞர்கள் ,புகைப்படக்கலைஞர்கள் வீடியோ கலைஞர்கள், சமையல் கலைஞர்கள்.ஒப்பனைக்கலைஞர்கள், மதகுருமார்கள், மலர் விற்பனையாளர்கள் என பலதரப்பட்டவர்களும் தமது தொழில்களை இழந்துள்ளதனால் அவர்களது வாழ்வாதாரமும் வருமானமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

சாதாரணமான கால கட்டத்தில் வேலையை இழந்தால் புதிய வேலை தேடிக்கொள்ளலாம். ஆனால், இப்போது நிலைமை அப்படியில்லை. சாதாரணமான கால கட்டத்திலேயே வேலை இழப்பு என்பது பெரும் பொருளாதார நெருக்கடியையும், மனவேதனையையும் கொடுக்கும் நிலையில் கொரோனா அச்சுறுத்தல் இருக்கும் இந்த நேரத்தில் வேலை இழப்பு ஏற்படுவதனால் ஊழியர்களுக்கு வருமான இழப்பு மட்டுமன்றி மன உளைச்சலும் ஏற்படுகின்றது. இதனால் பலர் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். அனைத்து தனியார் நிறுவனங்களும் வேலைநீக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இந்த நேரத்தில் புதிய வேலையைத் தேடிக் கண்டுபிடிப்பதும் சவாலான காரியம். இதனால் வேலை இழந்த ஒவ்வொருவரினதும் அவர்களின் குடும்பங்களினதும் எதிர் காலம் பெரும் கேள்விக்குறியிலேயே உள்ளது.

journo.lk



# உலகம் அழியும் என்று மாயன் நாள்காட்டி கணித்தது உண்மையா?

எம்.ஏ.பரணிதரன்

மாயா நாகரிகம்” மெசோ அமெரிக்கா (மத்திய கால அமெரிக்கா) என்ற இடத்தில் தோன்றியது. மிகப்பெரிய பரப்பளவைக் கொண்ட இந்த இடம், மத்திய அமெரிக்காவின் மெக்சிகோவை உள்ளடக்கியது.

அந்த காலத்தில் மாயா (மாயா என்பது மக்கள் பின்பற்றிய நாகரிகம், அவர்கள் பேசும் மொழி மாயன்) மக்கள், பிரமிப்பூட்டும் திக்கல் போன்ற பல நகரங்களை கட்டியெழுப்பினார்கள். வெவ்வேறு நகரங்களில் வாழ்ந்த மாயன்கள் வாழ்ந்த பகுதிகளை, வெவ்வேறு மன்னர்களும் மகாராணிகளும் ஆட்சி செய்தார்கள். இருந்தபோதும், அவர்கள் தங்களுக்குள்ளாக ஒரு பொதுவான நம்பிக்கை மற்றும் பாரம்பரியத்தை கொண்டிருந்தார்கள்.

வானில் நட்சத்திரங்களை படிப்பது, விண்ணுலக வரைபடத்தை பிரதிபலிக்கும் நகரங்களை கட்டியெழுப்பியது என வியத்தகு படைப்புகளை அவர்கள் உலகுக்கு வழங்கினர். மழைக்காடுகளில் வாழும் உயிரினங்களால் ஈர்க்கப்பட்ட அவர்கள், விலங்குகள், தாவரங்கள், ஆவிகளுடன் தொடர்பில் இருத்தல் போன்ற பல வழக்கங்களை கொண்டிருந்தார்கள்.

இந்த மாயன்கள் பழங்காலத்திலேயே மண்ணுலகம் 2012ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் நாள் முடிவுக்கு வரும் என்று கணித்திருந்ததாக ஒரு கூற்று நிலவுகிறது. அது எந்த அளவுக்கு உண்மை?

**யார் இந்த மாயா சமூகம்?**

மாயா என்பது ஒரு கலாசாரம். இன்றளவும் அது வழக்கத்தில் உள்ளது. மத்திய அமெரிக்காவின் மெக்சிகோ உள்ளிட்ட சில நாடுகளில் மாயா வாழ்வியல் முறைகளை கடைப்பிடிக்கும் சுமார் 70 லட்சம் பேர் வாழ்கிறார்கள். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக இந்த கலாசாரம் அழியாமல் இருக்க, வழிவழியாக அதை மாயா மக்கள் பின்பற்றி வருகிறார்கள்.

கிறிஸ்துவுக்கு முந்தைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்த பிராந்தியங்களில் “மாயா நாகரிகம்“ தழைத்திருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. கிறிஸ்துவுக்குப் பிந்தைய மூன்றாம் நூற்றாண்டில், இந்த பிராந்தியங்கள் நகர்ப்புறமாகி நவீன காலத்துக்குள் அடியெடுத்து வைத்தன.

அப்போது முதல் கி.பி 900ஆம் நூற்றாண்டுவரை அந்த நாகரிகம் தழைத்தது. இதன் மூலம் கொலம்பிய நாகரிகத்துக்கு முந்தைய, மிகவும் மேம்பட்ட நாகரிகமாக மாயா நாகரிகத்தை வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆனால், அந்த நூற்றாண்டுக்குப் பிறகு, படிப்படியாக மாயா நாகரிகம் வீழ்ச்சியடையத் தொடங்கியது. அதன் பல நகரங்களில் இருந்தும் மக்கள் வெளியேறினர் அல்லது இறந்து போனார்கள்.

**ஐரோப்பிய படையெடுப்பு**

ஐரோப்பியர்களின் புத்துலக கண்டுபிடிப்புகளைத் தொடர்ந்து, மாயா நிலப்பகுதிகள் பலவற்றை ஸ்பானிஷ் படையினர் கைப்பற்றினார்கள். அதனால், பழங்காலத்திலேயே மாயா நாகரிகமும் அவர்களின் கலாசார செல்வாக்கும் மறையத் தொடங்கின. அங்கு ஸ்பானிஷ் கலாசாரம் படிப்படியாக வேரூன்றி பழங்கால உலக நாகரிகத்தை ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. அது அங்கு வாழ்ந்த மக்களை, அப்போது விரிவடைந்து வந்த ரோமன் கத்தோலிக்க சமயத்தை தழுவத் தூண்டியது.

மாயா நாகரிக காலத்தில் கணிக்கப்பட்டதாக சொல்லப்படும், “2012ஆம் ஆண்டில் உலகம் முடிவுக்கு வரும்“ என உலா வரும் சாராம்சம், அந்த பிராந்தியத்தில் வாழும் தற்கால மக்களை விட, நவீன கால மாயா கலாசாரத்தை பின்பற்றும் மக்களை மையப்படுத்தியே கணிக்கப்பட்டதாக கருதப்படுகிறது.

**மாயா மக்களுக்கும் 2012க்கும் என்ன தொடர்பு?**

மாயா சமூகத்தினர், வெவ்வேறு நேர அளவீடுகளை அணுக, பல்வேறு நாள்காட்டி முறைகளை கொண்டிருந்தனர். உதாரணமாக, அவர்களின் வேளாண் பருவ சுழற்சி வருடாந்திர நாள்காட்டி, தற்போது நாம் கடைப்பிடிக்கும் வருடங்களில் 5,126 முழு நீள வருடங்களை கொண்டதாக நீண்டிருந்தது.

அவை 2,000 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டிருந்தன. ஆனாலும், அவை கிறிஸ்துவுக்கு முந்தைய நான்காயிரம் ஆண்டுகளில் இருந்தே கணிக்கப்பட்டதாக அறிய முடிகிறது. அந்த வகையில் மாயா கணக்கீட்டின்படி, அவர்களுடைய மிக நீளமான விவசாய பருவகால சுழற்சி, முடிவு பெறும் வருடம் 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதவாக்கில் வருவதாக நிபுணர்கள் குறிப்பிடுகிறார்கள். அதில் டிசம்பர் 21ஆம் திகதி என்பது பரவலான தேர்வாக அமைந்திருக்கிறது.

1960களில் தெற்கு மெக்சிகோவில் கண்டுபிடிக்கப்பட்ட டோர்டுவெரோ கால தொல்பொருள் படிமம் மட்டுமே, 2012ஆம் ஆண்டில் ஏற்படக்கூடிய நிகழ்வை மாயாக்கள் கணித்திருந்ததை வெளிப்படுத்தக் கூடிய ஆதாரமாக இன்றளவும் விளங்கி வருகிறது.

இடை அமெரிக்க கால எழுத்து முறையான மாயன் எழுத்துகள் இடம் பெற்ற அந்த படிமத்தில் மாயா நாள்காட்டியின் நீண்ட பருவகால சுழற்சியின் கணக்கீடு இடம்பெற்றிருந்தது. ஆனால், அதில் சில எழுத்துகள் படிக்க முடியாத வகையில் இருந்தன.

இதன் மூலம் மாயா நாகரிக காலத்தில் வேளாண் பருவகால சுழற்சியை கணிக்கும் நாள்காட்டியைப் பற்றியே அவர்கள் கணக்கீடு செய்திருந்தார்கள் என்பதும், அது உலக அழிவுக்கான கணிப்பு அல்ல என்பதும் தெளிவாகிறது.

**மாயா நம்பிக்கை**

மாயன் மொழி பேசும் மாயாக்கள், பல கடவுள் நம்பிக்கையை கொண்டிருந்தனர். அவர்களைப் பொருத்தவரை, ஒவ்வொரு கடவுளும் வாழ்வின் வெவ்வேறு அம்சங்களின் அடையாளமாக விளங்கினர். சில சமூகங்கள் இறைவனுக்காக விலங்குகளை படையலிட்டனர். சில நேரங்களில் அது நரபலியாகவும் இருந்தது.

உலகம் மிகப்பெரிய ஆமை வடிவிலானது என்றும் அது முடிவற்ற பெருங்கடலில் நீந்திச் செல்வதாகவும் வான் பரப்பை “பேக்கப்ஸ்“ என்ற நான்கு வல்லமை பொருந்திய கடவுள்கள் தாங்கிப்பிடித்திருப்பதாகவும் மாயாக்கள் நம்பினர்.

மாயாக்களின் நம்பிக்கையின்படி, “இறைவனை அடையக்கூடிய வானம், 13 நிலைகளாக உள்ளன. உயிர்த்தியாகம் அல்லது போரில் வீர மரணம் அடைந்தவர்கள் உச்ச நிலையை அடைவர். இயற்கை மரணம் அடைந்தவர்கள் ஜிபால்பா எனப்படும் ஒன்பது நிலையைக் கொண்ட நிழலுகுக்கு செல்கிறார்கள்.”

**“ஆதி மாயா” கால வாழ்க்கை**

மாயா ஆளுகையில் மிகவும் பிரபலமானவராக அறியப்படுபவர் மன்னர் பாக்கல் பேரரசு என்று அழைக்கப்படும் கின்னிக் ஜனாப் பாக்கல். மாயா பிரதேசத்தின் பலெங்க் பகுதியில் அவர் 68 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினார். பழங்கால மாயா உலகில் வேறு எந்த ஆட்சியாளரும் இத்தனை ஆண்டுகளுக்கு ஆளுகை புரியவில்லை.

இன்றைய காலத்தில் வாழும் சிறார்களைப் போல அன்றைய சிறார்களின் வாழ்க்கை இருந்திருக்கவில்லை. தங்களுடைய வசிப்பிடங்களில் அவர்கள் வழக்கத்துக்கும் குறைவான சிறிய ஆடைகளையே அணிந்திருந்தனர்.

யாக்ஸ் முட்டல், பெலங்க் போன்ற பெரிய நகரங்களில் வேளாண் விளை நிலங்கள் சூழ்ந்த பகுதிக்கு மத்தியில் மாயா மக்கள் வீடு கட்டி வாழ்ந்து வந்தனர். பெரியவர்கள் - விவசாயிகள், போர் வீரர்கள், வேட்டையாளர்கள், ஆசிரியர்கள் போன்ற பணிகளை செய்தனர். வசதி படைத்த குடும்பங்க ளில் இருந்து வந்த சிறார்கள் கணிதம், அறிவியல், எழுத்துமுறை, வானியல் அறிவியல் போன்றவற்றை படித்தனர். வறியநிலை சிறார்களுக்கான கல்வி, அவர்களின் பெற்றோராலேயே போதிக்கப்பட்டது.

தொன்மையான மாயா கால அடிநாதமாக இருந்த முதன்மைத் தொழில் விவசாயம். ஆனால், விவசாயத்தோடு நின்று விடாமல் அந்த மக்கள் புத்தாக்க படைப்புகளை உலகுக்கு வழங்கினர். வியப்பூட்டும் பிரமிட்டுகள், கட்டடங்கள், விலை உயர்ந்த பச்சை மாணிக்கக் கல் மூலம் தயாரிக்கப்பட்ட அழகிய பொருட்கள் உலகில் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கும் திறமைக்கும் சான்று கூறுகின்றன.

இன்றைய மனித குலத்தின் வாழ்வியல் நெறிமுறைகள் மேம்பட அந்த காலத்தில் மாயாக்கள் கண்டுபிடித்த “பூச்சியம்” என்ற கோட்பாடு, அவர்கள் உலகுக்கு விட்டுச் சென்ற முக்கிய பரிசாக பார்க்கப்படுகிறது.

இந்த பூச்சியத்தை தங்களுடைய காலத்திலேயே அவர்கள் பயன்படுத்தியிருப்பதால், சில நுட்பமான கணக்கீடுகள் அந்த காலத்திலேயே வழக்கத்தில் இருந்திருப்பது தெளிவாகிறது.

நாள்காட்டிகளை கணக்கிடவும், அந்த நாள்காட்டியைக் கொண்டு வேளாண் பருவ காலத்தை அவர்கள் கணக்கிட்ட விதமும் எப்படி என்பது இன்றளவும் கணித அறிவியலாளர்களுக்குப் புலப்படாத புதிராக உள்ளது.

நட்சத்திரங்களை பற்றியும் பருவநிலை பற்றியும் விரிவாக அவர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சி அல்லது ஞானமே, அவர்களின் கணிப்புகள் வெற்றிகரமாக அமைந்ததற்கு காரணம் என்கிறார்கள் வரலாற்றாய்வாளர்கள்.

எந்த பருவத்தில் எதை விளைவிக்கலாம் சாகுபடி செய்யலாம், அறுவடை செய்யலாம், எவை எல்லாம் குறுகிய கால அறுவடைக்கு உகந்தவை போன்ற கணிப்புகளை அவர்கள் துல்லியமாக செய்திருந்தனர்.

**பழங்கால மாயாக்களுக்கு என்ன ஆனது?**

மாயா நாகரிகம் மற்றும் அவர்களின் மாயன் மொழி பேசும் மக்கள் தொடர்பாக ஆராய்ச்சி செய்து வந்த வரலாற்றாய்வாளர்கள், கிறிஸ்துவுக்குப் பிறகு 850 முதல் 925ஆம் ஆண்டு காலகட்டத்தில் நவீன மாயா நகரங்கள் அந்த நூற்றாண்டு காலத்தில் சந்தித்த பெரும் வறட்சியை அந்த நகரங்கள் வீழ்ச்சி அடைந்தன என்று கூறுகிறார்கள்.

அதாவது ஒன்பதாம் நூற்றாண்டில் பிராந்தியத்தின் தென் பகுதிகளான இன்றைய குவாட்டமாலா மற்றும் பெலீஸ் பகுதி, பெரும்பாலும் வறட்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டன. யுகாட்டான் தீபகற்பம் முதல் வடக்குப்பகுதிவரை இந்த வறட்சி தொடர்ந்தது. ஆனாலும், மாயா நாகரிகம் முற்றிலும் அழியாமல் வறட்சிக்குப் பிந்தைய காலகட்டத்தில் தழைத்தது.

மாயா மக்கள் வாழ்ந்த பகுதிகளை ஸ்பானிஷ் படை ஆக்கிரமித்ததால் அவர்களின் மக்கள்தொகை சரிந்தது. ஆனாலும், அந்த மக்கள் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்து வந்ததால், அந்த நாகரிகம் இன்றளவும் கூட அவர்களின் வழி, வழியாக வந்த மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், 31 வகை மாயா மொழி பேசும் மக்கள் இன்றளவும் வாழ்கிறார்கள்.

எனினும், அந்தந்த பிராந்தியங்களில் நிலவும் இனவேற்றுமை காரணமாக அந்த மொழிகளும் அழிவின் விளிம்பில் இருப்பவையாக கருதப்படுகின்றன. இன்றளவும் சில பிராந்தியங்களில் மாயன் மொழி பேசுபவர்களுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்படுவதாகவும் அறிய முடிகிறது.

இதனால் அழியும் நிலையில் இருக்கும் மாயன் மொழியை பாதுகாக்க அது பற்றிய இலக்கியம் மற்றும் மொழி சார்ந்த குறிப்புகளை மாயன் மொழியிலும், ஸ்பானிஷ் மொழியிலும் சிலர் பதிவு செய்து வருகிறார்கள்.

மாயா நாகரிகத்தில் வாழ்ந்த மக்கள், உலகின் முடிவை கணிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால், பழங்கால மாயா நாகரிகத்தில் கடைப்பிடிக்கப்பட்ட நெறிகள், அறிவுசார் முறைகள், கண்டுபிடிப்புகள் போன்றவை, இன்றைய அறிஞர்களையும் விஞ்ஞானிகளையும் கூட வியப்படைய வைக்கின்றன.

மாயா நாள்காட்டி, உலகின் அழிவை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே கணித்ததா போன்ற குழப்பங்களுக்கு மத்தியிலும், சிக்கலான முறைகளைக் கொண்டிருந்த அந்த நாள்காட்டி எப்படி தயாரிக்கப்பட்டது என்ற பிரமிப்பை இன்றளவும் ஏற்படுத்தி வருகிறது. கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் உள்ளடக்கிய அந்த மாயா நாள்காட்டி நவீன கால மனித குல வளர்ச்சிக்கு திறவுகோலாக இருந்தது என்றால் அது மிகையாகாது. ■

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - II

நேரம் - 45 நிமிடம்

கல்வி tv CHANNEL

**35.** மண்ணை வளப்படுத்தி குப்பைகளை உக்கச் செய்து சூழலுக்கு நன்மை செய்யும் பிராணிகள் எவை?
1) எறும்பு, மண்புழு 2) மண்புழு, கறையான்
3) மண்புழு, அட்டை 4) மண்புழு, இலையான்

**36.** சூரிய குடும்பத்தில் உரோமானிய ஆட்சிக்காலத்தில் கடவுளின் பெயர் சூட்டப்பட்டுள்ள கோள் எது?
1) செவ்வாய் 2) புதன் 3) வியாழன் 4) வெள்ளி

**37.**



நம் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு குறியீடுகளை அவதானிக்கின்றோம். அந்த வகையில் அருகே காட்டப்பட்டுள்ள குறியீட்டினை காணக் கூடிய இடங்கள்
1) கணினி 2) பிளாஸ்ரிக் கதிரை
3) மோட்டார் சைக்கிள் 4) பத்திரிகை

**38.** குந்துகாலி என விசேடமாக அழைக்கப்படும் பிராணி
1) கங்காரு 2) குரங்கு 3) புழுணி 4) மைனா

**39.** இலங்கைக்கேயுரிய முலையூட்டிகளை மட்டும் கொண்ட தொகுதி
1) குரங்கு, முயல், மர அணில் 2) சுண்டெலி, மரநாய், கருங்குரங்கு
3) கருங்குரங்கு, மரநாய், கோழிக்கொண்டை 4) சுண்டெலி, குரங்கு, மரநாய்

**40.** மண்ணரிப்புக் காரணமாக ஏற்படக் கூடிய பாதிப்பு அல்லாதது,
1) மேல் மண்ணின் வளம் குன்றுதல் 2) வெள்ளப் பெருக்கு ஏற்படுதல்.
3) ஆறுகளுக்கடியில் மணல் நிரம்புதல். 4) மண்ணின் வளம் பேணப்படல்.

**41.** பருகுவதற்கான பானப் போத்தலொன்றை கொள்வனவு செய்கின்ற போது நடுநிலையான சீனி என்பதைக் குறிப்பதற்கான குறியீட்டு நிறம் யாது?
1) பச்சை 2) செம்மஞ்சள் 3) சிவப்பு 4) நீலம்

**42.** தூசு, மாசு ஆகியவற்றை நீக்குவதற்காக காற்றின் சக்தியைப் பயன்படுத்தும் புதுவகையான உபகரணம்
1) விசிறும் பொறி 2) காற்றாலை 3) சிவிறி 4) வக்கியூம் கிளீனர்

**43.** இறந்து போன உறவினர்களுக்குப் புண்ணியம் தேடும் வைபவத்தில் நீர் வார்க்கும் சம்பிரதாயத்துடன் தொடர்புடைய மதத்தவர்,
1) பௌத்தர்கள் 2) இஸ்லாமியர்கள் 3) இந்துக்கள் 4) கிறிஸ்தவர்கள்

**44.** நகர்ப்பகுதிகளில் விநியோகிக்கப்படும் நீருக்கு கட்டணம் செலுத்த வேண்டியுள்ளமைக்கான காரணமாக அமையாதது,
1) குடிநீரைச் சுத்திகரிக்க அதிக பணம் செலவாகுதல்.
2) நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வருமானத்தினை அதிகரித்துக் கொள்ளல்.
3) மறைமுகமாக நீர் நுகர்வைக் குறைத்தல்
4) சுத்திகரிக்கப்பட்ட நீர் வீண் விரயமாவதைத் தவிர்த்தல்

**45.** தேசியக் கொடியில் காண முடியாத வர்ணங்களைக் கொண்ட தொகுதி,
1) பச்சை, மஞ்சள், சிவப்பு
2) செம்மஞ்சள், மஞ்சள், சிவப்பு
3) பச்சை, சிவப்பு, செம்மஞ்சள்
4) நீலம், மஞ்சள், சிவப்பு

**46.** வீடுகளில் சிக்கன மின்குமிழ் (LED) பாவிப்பதன் மூலம் கிடைக்கும் பிரதான நன்மை,
1) மின்குமிழ்களை நீண்ட காலம் பயன்படுத்தலாம்.
2) மின்குமிழ்களைக் குறைந்த விலையில் கொள்வனவு செய்யலாம்.
3) மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தலாம்.
4) பிரகாசமான வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

**47.** பாடசாலையின் சிற்றுண்டிச் சாலையில் உள்ள உணவுப் பொருட்களின் சுத்தம் தொடர்பாக பரிசீலனை செய்யும் அதிகாரி,
1) பாடசாலை அதிபர் 2) கிராம உத்தியோகத்தர்
3) பிரதேச வைத்தியர் 4) பொதுச் சுகாதாரப் பரிசோதகர்

**48.** சுதேச ஆக்கங்களைக் கொண்டிராத தொகுதி,
1) முகமூடி, ஓலைப்பாய், அகப்பை 2) அகப்பை, விளக்குமாறு, தும்புத்தடி
3) தும்புத்தடி, ஓலைப்பாய், முகமூடி 4) சப்பாத்து, முகமூடி, அகப்பை

**49.** நோயிலிருந்து பாதுகாப்புப் பெற உண்ண வேண்டிய உணவுப் பொருட்கள்
1) மீன், பருப்பு 2) அவரை, கடலை
3) வல்லாரை, பசளி 4) கருப்பட்டி, கிழங்கு

**50.** மின்காந்தம் ஒன்றை அமைக்கத் தேவையான பொருட் தொகுதி,
1) இரும்பாணி, செப்புக் கம்பி, மின்குமிழ், உலர் மின்கலம்
2) உலர் மின்கலம், செப்புக் கம்பி, இரும்பாணி, குண்டூசி
3) உலர் மின்கலம், காந்தக் கோல், மின்குமிழ், செப்புக் கம்பி
4) காந்தக்கோல், செப்புக் கம்பி, குண்டூசி, இரும்பாணி

**51.** இலங்கையின் தேசிய மரத்தில் காண முடியாதது,
1) கடும்பச்சை நிறமான முற்றிய இலைகள்
2) வெள்ளை நிறமான ஐந்து இதழ்ப் பூ
3) மெல்லிய நீண்ட இலைகள்
4) சிவப்பு நிறமான இளந்தளிர்கள்

**52.** 2018 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண காற்பந்துப் போட்டி நடைபெறுகின்ற நாடு எது?
1) ரஷ்யா 2) யப்பான் 3) லண்டன் 4) பிரான்ஸ்

**53.** ஒரு திறமை மிக்க விளையாட்டுக்குழு வெற்றி பெறுவதற்கு அக் குழுவிடம் இருக்க வேண்டிய மிகப் பிரதான அம்சம் எது?
1) போட்டி பற்றிய அறிவு 2) கூடிய முயற்சி
3) ஒற்றுமையுடன் செயற்படல் 4) தனித்துச் செயற்படல்

**54.** தமது உணவில் ஈரப்பலாக்காய் கறியை அதிகம் பயன்படுத்தும் இலங்கை வாழ் இனத்தவர்,
1) தமிழர் 2) சிங்களவர் 3) முஸ்லிம்கள் 4) பறங்கியர்

**55.** வானொலி அலைவரிசையொன்றைச் சுருக்கமாகக் குறிக்கும் ஆங்கில சுருக்கப் பதம்
1) VHF 2) UHF 3) FM 4) SMS

**56.** யாதேனுமொரு பாரமான பொருளை உயரமான இடத்திற்கு நகர்த்துவதற்கு பயன்படக் கூடிய உபகரணம்
1) வீல்பரோ 2) கப்பி 3) கஸ்பர் வீல் 4) நெம்பு கோல்

**57.** இலங்கையர்களின் கலாசார நடனங்களில் அடங்காதது.
1) செம்பு நடனம் 2) காவடி 3) கண்டிய நடனம் 4) கதகளி

**58.** தொடர்ச்சியாக தொலைக்காட்சி பார்ப்பதனால் ஏற்படக் கூடிய தீமையாக அமைவது.
1) கல்வி நிகழ்ச்சிகளையும் பார்க்கலாம் 2) உலகத் தகவல்களையுப் பெறலாம்
3) வாசிப்பில் ஆர்வம் குறையும் 4) நேரடி நிகழ்ச்சிகளையும் பார்க்கலாம்.

**59.** நூலகத்தில் நாம் நடந்து கொள்ள வேண்டிய விதங்களில் ஒன்று
1) உரத்து வாசித்தல் 2) நூல்களை ஒழுங்கின்றி அடுக்குதல்
3) நூல்களைக் கிழித்தல் 4) அமைதி பேணல்

**60.** வடக்குத் திசையை அறிந்து கொள்ள பயன்படுத்தத்தக்க உடுத் தொகுதி
1) கார்த்திகை 2) தென்சிலுவை 3) பெருங்கரடி 4) கலப்பை

# புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துவதால் கொரோனா உறுதியாகும் வீதம் அதிகரிப்பு

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 09

**"புகைபிடித்தல் மற்றும் மதுபானம் அருந்துவதன் காரணமாக கொரோனாத் தொற்று உறுதியாகும் வீதம் அதிகரிக்கின்றது."**

- இவ்வாறு சுகாதார அமைச்சின் கொரோனா சம்பந்த மான பிரதான இணைப்பாளரும் சுகாதார சேவைகள் தொழிநுட்பப் பிரிவின் பணிப்பாளருமான மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

குறித்த செயல்பாடுகள் காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நாட்டில் நாளாந்தம் 16 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் புகைப்பிடித்தல் செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்று தெரியவந்துள்ளது.

மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையத்தின் தரவுகளில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், நாளாந்தம் 15 வயதுக்குக் குறைவான சுமார் 4 ஆயிரம் சிறுவர்கள் புகை பிடித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமையும் தெரியவந்துள்ளது. (இ)



# கரவெட்டியில் ஒருவர் தொற்றால் உயிரிழப்பு

வடமராட்சி, ஒக. 09

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா வைரஸ் தொற்றால் ஆண் ஒருவர் உயிரிழந்தார்.

கரவெட்டியைச் சேர்ந்த 73 வயதுடைய வயோதிபரே நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்தார்.

சிறுநீரக நோயால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த இவர், கொரோனாத் தொற்று காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்திருந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (இ - 02)

# சிறுவர்கள் அடங்கிய ஆபாச காட்சிகளை பதிவேற்றிய மேலும் 10 பேர் அடையாளம்

## தேடுதல் வேட்டை முன்னெடுப்பு என்கின்றது பொலிஸ்

கொழும்பு, ஒக. 09

சிறுவர்கள் அடங்கிய ஆபாசக் காட்சிகளை இணையத்தில் பதிவேற்றிய மேலும்10 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களைத் தேடும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவ்வாறு சிறுவர்கள் அடங்கிய ஆபாசப் படங்களை இணையத்தில் பதிவேற்றிய குற்றச்சாட்டில் கைதான 25 வயதான இளைஞர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இணையத்தளத்தில் சிறுவர் தொடர்பில் ஆபாசக் காட்சிகளை பதிவேற்றும் நபர்களைக் கண்டறிவதற்காக சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தில் விசேட பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இவ்வாறு ஸ்தாபிக்கப்பட்டுள்ள பிரிவினரால் கடந்த ஜூன் 17ஆம் திகதி முதல் ஆபாசப் படங்களை இணையத்தில் பதிவேற்றியவர்கள் தொடர்பான தகவல்கள் திரட்டப்படுகின்றன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (இ)





# சீனா நோக்கிப் பயணமாகிறது உலகின் பெரிய இரத்தினக்கல்

இரத்தினபுரி, ஒக. 09

இரத்தினப்புரி - பெல்மடுல்ல பகுதியில் அண்மையில் மீட்கப்பட்ட உலகின் மிகப்பெரிய இரத்தினக்கல்லை எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி சீனாவில் இடம்பெறவுள்ள உலகின் புகழ்பெற்ற இரத்தினக்கல் ஏலத்துக்கு முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஜனாதிபதியால் விசேட விமானம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

510 கிலோகிராம் நிறையுடைய குறித்த இரத்தினக்கல் 10 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியுடையது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை ரூபாயில் இது 2 ஆயிரம் கோடி பெறுமதியுடையது என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இரத்தினக்கல்லின் ஊடாக பாரிய அந்நியச் செலாவணியை ஈட்ட முடியும் என்று இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மேலும் கூறினார். (இ)

# 'கொரோனா' எம்.பிக்களுடன் தொடர்புடையவர்களை தேடி பாராளுமன்ற சி.சி.ரி.வி. கமராக்கள் சோதனை!

கொழும்பு, ஒக. 09

கொரோனா வைரஸ் தொற்று உறுதியான பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்புடையவர்களை அடையாளம் காண்பதற்காக பாராளுமன்றத்தில் உள்ள சி.சி.ரி.வி. காணொலி காட்சிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

தற்போது விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜானக திஸ்ஸ குட்டியாராச்சி, மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண திஸநாயக்க ஆகியோருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

அத்துடன் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெதாராச்சிக்கும் கொரோனாத்தொற்று உறுதியாகியுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற பாராளுமன்றக் கூட்டத் தொடரில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஜானக திஸ்ஸ குட்டியாராச்சி ஆகியோர் கலந்து கொண்டிருக்கவில்லை.

அத்துடன் அவர்களுடன் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்புபட்டிருக்கவில்லை என இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள சி.சி.ரி.வி. காணொலி காட்சிகளின் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களான திலிப் வெதாராச்சி, ரோஹண திஸாநாயக்க ஆகிய இருவரும் கடந்த வாரம் இடம்பெற்ற இரண்டு பாராளுமன்றக் கூட்டத்தொடர்களில் பங்கேற்றுள்ளனர்.

இந்நிலையில், தொடர்ந்தும் நாடாளுமன்றத்தில் உள்ள சி.சி.ரி.வி. காணொலி காட்சிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. (இ)



## கம்பஹா மாவட்டத்தில் தொடரும் ஆபத்து

# 18,937 கொரோனா தொற்றாளர்கள் வீடுகளிலேயே தனிமைப்படுத்தல்!

கம்பஹா, ஒக. 09

கம்பஹா மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் 1,839 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் நேற்றுக் காலை தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாம் அலையில் கம்பஹா மாவட்டத்தில் 75 ஆயிரத்து 987 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைவாக மஹர பிரிவில் 236 தொற்றாளர்களும், பியகம பிரிவில் 185 தொற்றாளர்களும், சீதுவ பிரிவில் 171 தொற்றாளர்களும், களனிப் பிரிவில் 159 தொற்றாளர்களும், அத்தனகல்ல பிரிவில் 150 தொற்றாளர்களும், மினுவாங்கொடைப் பிரிவில் 145 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கம்பஹா பிரிவில் 139 தொற்றாளர்களும், மீரிகம பிரிவில் 136 தொற்றாளர்களும், வத்தளைப்பிரிவில் 135 தொற்றாளர்களும், தொம்பே பிரிவில் 110 தொற்றாளர்களும், கட்டான பிரிவில் 96 தொற்றாளர்களும், ராகம பிரிவில் 70 தொற்றாளர்களும், நீர்கொழும்பு பிரிவில் 43 தொற்றாளர்களும், ஜா - எல பிரிவில் 34 தொற்றாளர்களும், திவுலப்பிட்டிய பிரிவில் 30 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 18 ஆயிரத்து 937 பேர் வீடுகளிலேயே தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்கள் தொகை அதிகரித்து வருவதால் பொதுமக்கள் உரிய சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி நடக்குமாறு கம்பஹா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் பொதுமக்களை கோரியுள்ளது. (இ)

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய மேலும் 118 பேர் கைது!

கொழும்பு, ஒக.09

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 118 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்டபிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைய தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 53 ஆயிரத்து 571 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# பல நாடுகள், நகரங்களில் நெருப்பு எதேன்ஸ் நகரை எட்டியது காட்டு தீ!

- கலிபோர்னியாவில் 175,000 ஹெக்ரெயர் நாசம்
- துருக்கியில் பல்லாயிரம் பேர் வெளியேற்றம்
- கிரீஸில் 158 இடங்கள் தீயால் பற்றியெரிகின்றன
- ஒலிம்பிக்கின் பிறப்பிடமும் தீயால் பாதிப்பு



எதேன்ஸ், ஓக. 09

கிரீஸ் நாட்டின் பல பகுதிகளில் காட்டு தீ கட்டுக்கடங்காமல் பரவிவருகின்றது. இது தலைநகர் எதேன்ஸின் புறநகரப் பகுதிகளை எட்டியுள்ளது. தலைநகரின் வடக்கே வானில் பெரும் கரும்புகை மண்டலம் எழுவதையும் தீப்பிளம்புகள் தெரிவதையும் கிரீஸ் நாட்டின் தொலைக்காட்சிகள் காட்டின. இதனிடையே நகரப் பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் புறகரம் மற்றும் சிறுநகரங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

தீயை அணைக்கும் பணியில் ஆயிரம் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் தண்ணீர் குண்டுகளை வீசும் 20 ஹெலிகொப்டர்களும் களத்தில் இறங்கியுள்ளன. தீயை அணைக்கும் பணியில் கிரீஸூக்கு துணையாக அமெரிக்கா, இங்கிலாந்து, சுவிற்சரிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட வெளிநாடுகள் பல இணைந்துள்ளன.

கடந்த 10 நாட்களில் 56 ஆயிரம் ஹெக்ரெயர் ( ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர்) பகுதிகள் கிரேக்கத்தில் தீயால் நாசமாகின என்று ஐரோப்பிய தீ பரவல் தொடர்பான தகவல் அமைப்பு தெரிவித்துள்ளது.

தீயை அணைக்கப் போராடிய வீரர் ஒருவர் உயிரிழந்தார். இதனிடைய பல பத்து பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரியவருகின்றது. கிரீஸ் நாட்டில் ஒலிம்பிக் போட்டிகளின் பிறப்பிடமாகிய தொன்மை மிகுந்த ஒலிம்பியா நகரம் மற்றும் ஏவியா தீவு உட்பட 158 இடங்களில் காட்டுத்தீ மூண்டிருக்கிறது. தொடர்ந்து கிரேக்கம் முழுவதும் வீசி வருகின்ற அனல் காற்று தீயை மேலும் தீவிரமாக்கிவருகிறது.

கிரீஸ் நாட்டைப் போன்று இத்தாலி உட்பட ஐரோப்பாவின் வேறு பல பகுதிகளிலும் கடும் வெப்பமும் காட்டுத் தீயும் ஏற்பட்டுள்ளது. அதன் அயல்நாடான துருக்கி அதன் வரலாற்றில் கண்டிராத பெரும் காட்டுத் தீயினால் சூழப்பட்டுள்ளது. துருக்கியின் தெற்கு மத்தியதரை கரையோரங்களில் இருந்து பல்லாயிரக் கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். இதுவரை எட்டுப் பேர் உயிரிழந்தனர்.

அனல் மின் நிலையம் அமைந்துள்ள பகுதியை தீ நெருங்கியதால் அங்கிருந்து பல்லாயிரக்கணக்கானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர். ஐரோப்பிய ஒன்றியம் தீயைக் கட்டுப்படுத்துவதற்கான அவசர உதவிகளைத் துருக்கிக்கு வழங்கியுள்ளது.

'டிக்ஸி தீ' என்று அழைக்கப்படும் பெரும் காட்டுத் தீ அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் பேரழிவை ஏற்படுத்திவருகிறது. அங்கு ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ஹெக்ரேயர் பரப்பளவுக்கு காடுகள், தாவர இனங்கள் அழிந்துள்ளன. (ஐ)



# 3 நாட்களில் 3 நகரங்கள் தலிபான்களிடம் வீழ்ந்தன

காபூல், ஓக. 09

ஆப்கானிஸ்தானில் கடந்த மூன்று நாட்களில் மூன்று மாகாண தலைநகரங்களை தலிபான்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.

அமெரிக்கப் படைகள் வெளியேறுவதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை ஜவ்சான் மாகாண தலைநகரம் ஷெபர்கானை தலிபான்கள் கைப்பற்றினர். நேற்று முன்தினம் குண்டூஸ் நகரை தலிபான்கள் கைபற்றி உள்ளனர். கடந்த மூன்று நாட்களில் தலிபான்கள் கைப்பற்றிய மூன்றாவது மாகாண தலைநகரம் இதுவாகும்.

3 மாகாண தலைநகரங்கள் தலிபான்கள் கைவசம் சென்றுவிட்டதால் அடுத்து என்ன நடக்குமோ என்ற நிலை அங்கு நிலவுகிறது. தலிபான்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் பொலிஸ் தலைமையகம், ஆளுநர் வளாகம் மற்றும் நகரத்தில் உள்ள சிறைச்சாலையை கைப்பற்றியதாக கூறி உள்ளனர்.

இதனிடையே, இழந்த தலைநகரங்களை மீண்டும் கைப்பற்றுவதற்கு ஆப்கானிஸ்தான் படையினர் கடும் தாக்குதல்களை தொடங்கியுள்ளனர். (ஐ)

# ஆப்கான் படைகள் தாக்குதல்: 570 தலிபான்கள் உயிரிழப்பு!

காபூல், ஓக. 09

நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் ஆப்கான் இராணுவம் நடத்திய தாக்குதலில் 570இற்கும் மேற்பட்ட தலிபான்கள் உயிரிழந்தனர் என்று அந்த நாட்டின் பாது காப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் வெளியேறியதைத் தொடர்ந்து தலிபான்களின் கை ஓங்கி வருகின்றது. இந்த நிலையில், முக்கிய நகர்களை தலிபான்கள் கைப்பற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானின் பல்வேறு இடங்களில் தலிபான் பயங்கரவாதிகளுக்கு எதிராக ஆப்கானிஸ்தான் படைகள் தாக்குதல் நடத்தியதில் 570 பேர் கொல்லப்பட்டனர். 309 பேர் காயமடைந்தனர் என்று ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் ஹெல்மண்ட் மாகாணத்தில் லஷ்கர் கா புறநகர் பகுதியில் சனிக்கிழமை இரவு நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் அல்-கொய்தா பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த மூன்று பாகிஸ்தானியர்கள் உள்பட 45 தலிபான் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான் படைகள், அமெரிக்க விமானப் படையின் உதவியுடன் அமெரிக்க படைகள் முறையாக வெளியேறுவதற்கு முன்னதாக நாட்டில் தீவிரமாக ஆக்கிரமித்துள்ள தலிபான்களுக்கு எதிராக பதிலடி நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளன. (ஐ)

# ரோக்கியோ ரயிலில் கத்திக்குத்து: 10 பேர் காயம் தாக்குதலாளி கைது!



ரோக்கியோ, ஓக. 09

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் ஒலிம்பிக் போட்டி நிறைவு நாளான நேற்று ரயில் ஒன்றில் கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் 10 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

ரயிலில் பயணித்த சுமார் 20 வயது மதிக் கத்தக்க இளைஞரே திடீ ரென பயணிகள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அறிந்து விரைந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் கத்தி ஒன்றும் கைபேசியும் மீட்கப்பட்டன. தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணைகளில் தாக்குதலை நடத்தினார் என்று கூறப்படும் இளைஞரையும் கைது செய்தனர். (ஐ)

# செவ்வாய் பாறை துகளை சேகரிக்கும் முதல் முயற்சி தோல்வியில் முடிந்தது!

நியூயோரக், ஓக. 09

செவ்வாய் கிரகத்தின் பாறை துகளை சேகரிக்கும் பெர்சவரன்ஸ் ரோவரின் முதல் முயற்சி தோல்வியில் முடிவடைந்ததாக நாஸா தெரிவித்துள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா கடந்த பெப்ரவரி மாதம் செவ்வாய் கிரகத்தில் பெர்சவரன்ஸ் ரோவரை தரையிறக்கியது.

செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்ந்தனவா என்பதை ஆராய்வதற்காக அங்கிருந்து பாறை மற்றும் மண் துகள்களை சேகரிக்கும் பணியில் பெர்சவரன்ஸ் ரோவர் ஈடுபட்டுள்ளது.

இந்தநிலையில் பாறை துகள்களை சேகரிக்கும் பெர்சவரன்ஸ் ரோவரின் முதல் முயற்சி தோல்வியில் முடிந்தது. பெர்சவரன்ஸ் ரோவரில் பொருத்தப்பட்டுள்ள 7 அடி நீளமுள்ள ரோபோ கையில் தரையில் துளையிடுவதற்கான கருவி மற்றும் மாதிரிகளை எடுப்பதற்கான கருவி பொருத்தப்பட்டுள்ளன.

மேலும், எடுக்கப்பட்ட மாதிரிகளை சேமித்து வைக்க 43 டைட்டானியம் குழாய்களும் உள்ளன. அதன்படி பெர்சவரன்ஸ் ரோவர் மாதிரிகளை



சேகரிக்கும் தனது முதல் முயற்சியில் தரையில் வெற்றிகரமாக துளையிட்டது.

ஆனால், அதிலிருந்து பாறைகளை எடுத்து குழாயில் அடைத்து மூடுவதற்கான முயற்சி தோல்வியில் முடிந்தது. பெர்சவரன்ஸ் ரோவரின் நிலைமையை மதிப்பீடு செய்வதற்கும் இந்த பிரச்னையை தீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ)




# ஒலிம்பிக் போட்டிகள் நிறைவு! முதலிடம் பிடித்தது அமெரிக்கா

ரோக்கியோ, ஒக. 09
ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் நேற்றுடன் நிறைவடைந்தன.
ஒலிம்பிக் மைதானத்தில் அமைக்கப்பட்ட மேடையில் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் தோமஸ் பாக் ரோக்கியோ ஒலிம்பிக் போட்டி நிறைவடைந்ததாக அறிவித்தார். இதைத் தொடர்ந்து 2024ஆம் ஆண்டுக்கான போட்டிகள் பாரிஸ் நகருக்கு மாற்றப்படுவதற்கான அறிவிப்பாக பிரெஞ்சு கொடி ஏற்றப்பட்டது. இதன் பின்னர் ஒலிம்பிக் சுடர் அணைக்கப்பட்டது.
முன்னதாக, மரதன் ஓட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான பதக்கங்கள் வழங்கப்பட்டன. இதைத் தொடர்ந்து விழா மேடையில்பேரிகை முழங்கப்பட்டது. தொடர்ந்து மக்கள் நடனம் இடம்பெற்றது. அத்துடன், ஜப்பான் நாட்டின் பாரம்பரிய நடனங்கள் ஆடப்பட்டன. அத்துடன், பாரம்பரிய இசையும் இசைக்கப்பட்டது. ஒலிம்பிக் விளையாட்டு நிறைவில் வாண வேடிக் கைகளும் இடம்பெற்றன.
நிறைவுபெற்ற ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்கா 39 தங்கப் பதக்கங்கள் 41 வெள்ளி, 33 வெண்கலம் என 113 பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது அமெரிக்கா.
38 தங்கப் பதக்கங்களை வென்ற சீனா 2ஆவது இடத்தைப் பிடித்தது. போட்டியை நடத்திய ஜப்பான் 27 தங்கப் பதக்கங்களுடன் 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.
ஒலிம்பிக்கின் கடைசி தங்கப் பதக்கத்தை சேர்பியா கைப்பற்றியது. இலங்கை எந்தப் பதக்கத்தையும் கைப்பற்றவில்லை. (ஐ)

# ஒலிம்பிக் மரதன் ஓட்டம்: கிப்சோகேவுக்கு தங்கம்!

ரோக்கியோ, ஒக. 09
ஜப்பானின் சப்போரோ நகரில் நேற்று நடைபெற்ற ரோக்கியோ 2020 ஒலிம்பிக்கின் ஆண்களுக்கான மரதன் போட்டியில் கென்யாவின் எலியுட் கிப்சோகே வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக்கொண்டார்.
ஐந்து வருடங்களுக்கு முன்னர் ரியோ 2016 ஒலிம்பிக் விளையாட்டு விழாவிலும் கிப்கோகே வெற்றியீட்டி தங்கப் பதக்கத்தை சுவீகரித்திருந்தார்.
ரோக்கியோ ஒலிம்பிக் மெய்வல்லுநர் போட்டிகளில் கடைசி நிகழ்ச்சியாக ஜப்பான் நேரப்படி நேற்று காலை 7.00 மணிக்கு ஆரம்பமான ஆண்களுக்கு மரதன் போட்டியில் கிப்சோகே சிரமமின்றி வெற்றிபெற்றார்.
இது கிப்சாகேயின் நான்காவது ஒலிம்பிக் போட்டியாகும். இதில் அவர் பந்தய இலக்கை 2 மணித்தியாலங்கள், 8 நிமிடங்கள், 38 செக்கன்களில் கடந்து தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.
ரியோ ஒலிம்பிக்கில் அவர் எடுத்துக்கொண்ட நேரத்தை விட ரோக்கியோவில் கிப்சோகே குறைந்த நேரத்தைப் பதிவு செய்து வெற்றியீட்டினார். இதில், நெதர்லாந்து வீரர் ஆப்தி நஜியே (2:09:58) வெள்ளிப் பதக்கத்தையும் பெல்ஜியம் வீரர் பஷீர் ஆப்தி (2:10:00) வெண்கலப் பதக்கத்தையும் வென்றெடுத்தனர். (ஐ)






# ஒலிம்பிக் உதைபந்தாட்டம்: பிரேஸில் அணிக்கு தங்கம்!

ரோக்கியோ, ஒக. 09
ரோக்கியோ ஒலிம்பிக்கின் உதைபந்தாட்ட போட்டியில் ஸ்பெயினை 1 - 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது பிரேஸில். இதன் மூலம் ரியோ ஒலிம்பிக்கில் பெற்ற சம்பியன் பட்டத்தை பிரேஸில் தக்க வைத்தது.
யொக்கோஹாமா, நிசன் விளையாட்டரங்கில் சனிக்கிழமை இரவு இந்தப் போட்டிகள் இடம்பெற்றன.
விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் மாற்று வீரராக களம்புகுந்த மெல்கம், மேலதிக நேரத்தின் 108ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலை அடித்தார்.
ஐந்து வருடங்களுக்கு முன்னர் ரியோ 2016 ஒலிம்பிக் ஆண்கள் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் பெனல்டி முறையில் ஜேர்மனியை பிரேஸில் வெற்றி கொண்டு தங்கப் பதக்கத்தை சுவீகரித்திருந்தது.

## ஒலிம்பிக் கூடைப்பந்தாட்டம்:

# தொடர்ச்சியாக 7ஆவது முறை தங்கம் வென்றது அமெரிக்கா!

ரோக்கியோ, ஒக. 09
ஜப்பானை 90 - 75 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிகொண்ட அமெரிக்கா தொடர்ச்சியாக 7ஆவது தடவையாக பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத்தில் ஒலிம்பிக் தங்கப்பதக்கத்தை சுவீகரித்தது.
ஜப்பானின் சய்ட்டாமா சுப்பர் அரினா உள்ளக அரங்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டி நடந்தது.
இறுதிப் போட்டியில் அமெரிக்கா வென்றதன மூலம் சிரேஷ்ட வீராங்கனைகளான சூபேர்ட், டயனா டௌராசி ஆகிய இருவரும் 5 ஒலிம்பிக் தங்கப் பதக்கங்களை வென்ற முதலாவது வீராங்கனைகளாகினர்.
இந்த வெற்றியுடன் ஐக்கிய அமெரிக்க பெண்கள் கூடைப்பந்தாட்ட அணி ஒலிம்பிக் அரங்கில் தொடர்ச்சியாக 55 போட்டிகளில் தோல்வி அடையாத அணியாகத் திகழ்கின்றது. 1992 பார்சிலோனா ஒலிம்பிக் விளையாட்டு விழா அரை இறுதிப் போட்டியிலேயே ஐக்கிய அமெரிக்க பெண்கள் கூடைப்பந்தாட்ட அணி கடைசியாக தோல்வி அடைந்திருந்தது.
10 நிமிடங்களைக் கொண்ட நான்கு ஆட்டநேர பகுதிகளின் முதல் 3இல் ஐக்கிய அமெரிக்கா முறையே 23 - 14, 27 - 25, 25 - 17 என முன்னிலை வகித்தது. கடைசி ஆட்ட நேர பகுதியை ஜப்பான் 19 - 15 என தனதாக்கிக்கொண்டிருந்தது. இந்தப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை வென்ற ஜப்பான், ஒலிம்பிக் கூடைப்பந்தாட்டத்தில் அதி சிறந்த பெறுபேறைப் பதிவுசெய்துகொண்டது. (ஐ)



# சுற்றுலா பயணிகளாலேயே இலங்கையில் டெல்டா தீவிரம்

## அரசே முழுப்பொறுப்பு என்று சம்பிக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.09

**“இந்தியா, ரஷ்யா மற்றும் உக்ரைனிலிருந்து சுற்றுலாப் பயணிகள் அழைத்து வரப்பட்டமையே இலங்கையில் டெல்டா பரவல் தீவிரமடையப் பிரதான காரணமாகும். எனவே, தற்போது இது தொடர்பில் புலனாய்வு விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.”**



- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா பரவல் நான்காவது அலை கட்டுப்பாட்டை மீறி முழு நாடும் பாரதூரமான நிலைமையை அடைந்துள்ளது.

2020ஆம் ஆண்டு ஜனவரியில் கொரோனா பரவல் தொடர்பான தகவல்கள் வெளியாக ஆரம்பித்தபோது அரசு அதனைக் கேலிக்குள்ளாக்கியது.

இதனைவிடப் பாரிய பிரச்னைகளுக்கு முகங்கொடுத்ததாகக் கூறிய அரசு, நாளாந்தம் 3 ஆயிரம் பேர் உயிரிழந்த போரை நிறைவுக்குக் கொண்டு வந்த எமக்கு இது ஒரு பாரிய பிரச்னையல்ல என்றும் தெரிவித்தது.

அரசின் இவ்வாறான அசமந்தப்போக்கே நாடு தற்போதுள்ள நிலைமைக்குக் காரணமாகும்.

அரசின் முட்டாள்தனமான முடிவுகளும் , வியாபார நோக்கமும் , அரசியல் நோக்கமும் இந்தப் பாரதூரமான விளைவுகளுக்குக் காரணம் ஆகும். இதற்கு அரசே முழுப் பொறுப்புக் கூற வேண்டும்” - என்றார். (இ)



# கஞ்சாவுடன் 8 பேர் கைது!

நுவரெலியா, ஓக. 09

நுவரெலியா மாவட்டம், திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை பகுதியில் விற்பனைக்காக வைத்திருந்த கஞ்சாவுடன், 8 சந்தேகநபர்களைக் ஹற்றன் கலால் திணைக்கள அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஹட்டன் கலால் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 8 சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து பத்தாயிரம் மில்லிகிராம் கஞ்சா மீட்கப்பட்டது எனக் கலால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் 8 பேரையும் விசாரணைகளின் பின்னர் ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ)

# மேலும் நாற்பது இலட்சம் தடுப்பூசிகள் சீனாவிலிருந்து நேற்று இலங்கைக்கு

கொழும்பு, ஓக. 09

சீனாவிலிருந்து மேலும் 40 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் நேற்று இலங்கையை வந்தடைந்தன.




ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான யூ.எல் 1869, யூ.எல் 865 மற்றும் யூ.எல் 869 ஆகிய மூன்று விசேட விமானங்கள் மூலம் இவை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தன.

நாட்டின் அவசியம் கருதி கடந்த மார்ச் மாதம் முதல் இது வரையில் ஒரு கோடியே 30 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளை சீனாவிலிருந்து தமது விமானங்கள் மூலம் இலங்கைக்கு எடுத்துவரப்பட்டுள்ளன என்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது. (இ)

## மரண அறிவித்தல்



மலர்வு 25 - 07 - 1933

உதிர்வு 03 - 08 - 2021

### திருமதி நேசரெத்தினம் தம்பிராசா

எருவில் கிழக்கு பாரதிபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசரெத்தினம் தம்பிராசா 03.08.2021 செவ்வாய்க் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சங்குவதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலிப்போடி - செம்பகணாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சந்திரசேகரம், சீதாலெட்சுமியின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சின்னத்தம்பி, கனகரெத்தினம், இராசதுரை, இளையதம்பி, தெய்வானை, குணநாயகி மற்றும் குமாரப்போடி, பொன்னம்மா, சௌந்தரி, பூபதி, சீவரெத்தினம், காந்தமலர் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, ஏகாம்பரம், மைலிப்போடி, ஆறுமுகம், யோகராஜா மற்றும் செல்வராசா, வையாளிப்போடி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, நீலவேணி, மகேஸ்வரன் காலஞ்சென்றதில்லேஸ்வரன், செந்தூர் (London), பத்மினிதேவி, கயிலைநேசன், கதிர்காமவேல் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் இராசநாயகி, வேதநாயகி, அன்னலெட்சுமி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், செல்வநாயகம், கிருபையம்மா, ஐயாத்துரை, புஸ்பவதி, அருணா (London), ஈஸ்வரன், உசாநந்தினி, சுகிதாசினி, மகேந்திரன், உதயகுமார், பேரின்பராசா ஆகியோரின் அன்புமாமியாரும், ஜீவராணி (ஆசிரியர் - வம்மிவட்டுவான்,வாகரை) தவேந்திரன் (தாதிய உத்தியோகத்தர் - களு வாஞ்சிகுடி), தேவரூபன் (விவசாய தொழில்நுட்ப உத்தியோகத்தர்), நிமல்ராஜ்,குணராஜ், ஜதுஸ்ராஜ், ரூபகாந்தன், துயந்தன்,கிருஸ்ரின் (மாவட்டநீதிமன்றம் - திருகோண மலை), வினேஸ்காந், சிவகுமார், சுகந்தினி ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும்,வேதரூபி, துஷாந்தினி, உருத்திராங்கரன், குணாநிதி, தர்சினி,தினேகா,பிரியா, லக்சிகா, ஆஹாஸ் பொருளியலாளர் London), அக்ஷயா (London), அஸ்வினி, டசாந், சிவசுப்பிரமணியம், துசாந்தினி, நிதர்சினி (தென்னை அபிவிருத்திஉத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், திவானு,பவிஷாந், ஆதிஷா, ஜஸ்மிகா, வவிசனா, லக்ஷித், லஸ்விந், கரிசினி, அக்ஷாத், திபிக்ஷா, சஸ்விதா, கிந்துஜன் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



மலர்வு 19 - 08 - 1928

உதிர்வு 06 - 08 - 2021

### செல்லையா புண்ணியமூர்த்தி

தொண்டைமனாற்றை பிறப்பிடமாக கொண்டவரும் கூத்தன் சீமா அளவெட்டி வடக்கை சேர்ந்தவரும் 189/1. 3/4 மகாவித்தியாலய மாவத்தை. கொட்டாஞ்சேனை, கொழும்பை வதிவிடமாக கொண்டவரும், பிரபல பிரசித்த நொத்தாரிசும். பதிவாளரும். வவுனியா மாவட்ட உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற பதில் நீதிபதியுமாகிய செல்லையா புண்ணியமூர்த்தி கடந்த (06.08.2021) வெள்ளிக்கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் திருமதி சாவித்திரி புண்ணியமூர்த்தி அவர்களின் அன்புக் கணவரும் கெங்காதரன் (பிரான்ஸ்), லிங்காதரன் (நோர்வே), புவிதரன் (நோர்வே), செல்வி. நிரஞ்சனா (கொழும்பு), திருமதி மேகலா சுதாகரன் (மருத்துவர், டி சொய்ஸா மகப்பேற்று மருத்துவமனை. கொழும்பு). ஆகியோரின் அன்புத் தந்தையும், கிரு பாளினி, துளசி மணி. ரகுணா, சுதாகரன் ஆகியோரின் பாசமிகு மாம னாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.08.2021) ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இந்த அறிவித்தவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(கொழும்பு)

தொடர்பு :
076 4485957, 011 243 6518

# இ.தொ.கா. அலுவலகத்தில் 8 ஊழியர்களுக்கு கொரோனா

கொட்டகலை, ஓக. 09

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கொட்டகலை அலுவலகத்தில் பணிபுரியும் 8 ஊழியர்களுக்குகே கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது எனக் கொட்டகலை பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

குறித்த அலுவலகத்தில் பணிபுரியும் இருவருக்குத் தொற்று உறுதிபடுத்தப்பட்ட நிலையில் 13 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் மேலும் அறுவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

அவர்களுடன் தொடர்பைப் பேணிய 9 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் தொற்றுக்குள்ளானவர்களை தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. (இ)

## யாழ்ப்பாணத்தில்...

பாணம் போதனா மருத்துவமனையில் 18 பேரும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 15 பேரும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 6 பேரும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 2 பேரும், பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனையில் ஒருவரும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒருவரும், வேலணை மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும், பருத்தித்துறை மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும் என 45 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் 4 பேரும், செட்டிக்குளம் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேரும் என 8 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

மன்னார் மாவட்டத்தில் மடு மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேரும், மன்னார் பொது மருத்துவமனையில் 2 பேரும் என 8 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேரும், பூநகரி மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேரும் என 6 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர். முல்லைத்தீவு பொது மருத்துவமனையிலும் ஒருவர் தொற்றாளராக இனங்காணப்பட்டார். (ஐ)

## சீனி உள்ளிட்ட...

கிலோவொன்றின் மொத்த விற்பனை விலையானது 140 ரூபாவாகவும் காணப்படுகின்றது.

சிவப்பு பருப்பு அவுஸ்திரேலியா மற்றும் கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற நிலையில், சர்வதேச சந்தையில் தற்போது விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாகவே உள்நாட்டு சந்தையிலும் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.

எவ்வாறாயினும், சீனி இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் உள்நாட்டு சந்தையில் சீனிக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடக பேச்சாளர் நிஹால் செனவிரட்ன தெரிவித்துள்ளார். (இ)

## எனது மகன் ...

பண்டாரநாயக்க கொள்கை அடிப்படையில் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க விமுக்தி தயார் நிலையில் இருக்கிறாரென அந்த தகவல்கள் தெரிவித்தன. இந்நிலையில் இந்த செய்திக்கு பதிலளிக்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அதில் தனது மகனான விமுக்தி குமாரதுங்க அரசியலில் ஈடுபடப்போகிறாரென வெளிவரும் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் அரசியலில் ஈடுபடுவதற்கும் அரசியல் ஆசையும் அவருக்கு இல்லை எனவும் இந்த நாட்டிற்கு பண்டாரநாயக்க பரம்பரை செய்த நன்மைகளும் அதனால் பெற்ற துன்பங்களும் போதும் எனவும் அவற்றை தனது மகனுக்கும் கொடுக்க தான் விரும்பவில்லை எனவும் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

விமுக்தி குமாரதுங்க நாட்டை நேசிக்கும் நபர் எனவும் அரசியல் ஊடாகத்தான் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று இல்லை எனவும் தெரிவித்துள்ள சந்திரிகா, ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் வெளியாகும் செய்திகளில் உண்மை இல்லை எனவும் அவற்றை நம்ப வேண்டாம் எனவும் நாட்டு மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சந்நிதியான் ஆச்சிரமதில் ஒருவருக்கு கொரோனா!

வடமராட்சி, ஓக. 09

தொண்டைமனாறு செல்வச்சந்நிதியில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமம் முடக்கப்பட்ட நிலையில் அங்கு பணியாற்றும் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் சுகாதார அமைச்சினால் நாடுமுழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி கடந்த வெள்ளிக்கிழமை அன்னதானம் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து பொதுச் சுகாதார பரிசோதகரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் ஆச்சிரமம் தனிமைப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் அங்கு பணியாற்றுபவர்கள் மற்றும் சந்நிதி முருகன் ஆலயத்தைச் சேர்ந்தோரிடம் மாதிரிகள் பெறப்பட்டு பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது, சந்நிதியான் ஆச்சிரமத்தில் பணியாற்றும் 51 வயது நபர் ஒருவருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (ஐ)

## 'செல்பி' எடுக்க...

அவர் நீரோட்டத்தில் இழுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

கடலில் விழுந்த இளைஞரை கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த கடற்றொழிலாளர்கள் அவரைத் தேடியபோதும் மீட்க முடியவில்லை. நீண்ட நேரத் தேடுதலின் பின்னர் காணாமல் போனவரை தேடும் பணிகள் கைவிடப்பட்டன. (ஐ-3)

## நாளாந்தம்..

உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 29 ஆயிரத்து 994 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 563 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர். அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 93 ஆயிரத்து 357 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## எதிர்வரும் ...

கொரோனா மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், நாளொன்றில் பதிவாகும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

எனவே, பொதுமக்கள் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும் எனவும், சுகாதார வழிமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும் எனவும் அரசாலும் சுகாதாரத்துறையாலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தேவையற்ற வகையில் யாரும் வீட்டை விட்டு வெளியில் செல்ல வேண்டாம் எனவும் அரசும் சுகாதாரத்துறையும் கேட்டுக்கொண்டுள்ளன. (இ)

## பரபரப்பை...

இந்த பதிவு அரசியல் அர்த்தம் கொண்டது எனவும் மைத்திரிபால சிறிசேன அரசியலில் முக்கிய முடிவு எடுக்க முனைவதாகவும் அரசியல் விமர்சகர்கள் அவரது பதிவை விமர்சித்துள்ளனர்.

அந்த பதிவு வருமாறு,

"சில அத்தியாயங்கள் சோகமானவை, மற்றவை சாகசமானவை. சவாலான அத்தியாயங்கள் இல்லாமல் இல்லை. ஒரு முதிர்ந்த எழுத்தாளர் சரியான நேரத்தில் சரியான புத்தகத்தை எழுதுவார். ஒரு முதிர்ந்த எழுத்தாளரின் கடைசி அத்தியாயம் ஆச்சரியமாக இருக்கும்."

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.



## இறுக்கமான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் செல்வசந்நிதி முருகனுக்கு கொடியேற்றம்!

வடமராட்சி, ஓக. 09

வரலாற்று பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவிலின் வருடாந்த பெருந்திருவிழா இறுக்கமான சுகாதார கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தற்போது நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்துள்ள நிலையில் இறுக்கமான சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட100 பேர் மட்டும் பங்கேற்றனர்.

செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு செல்வதற்கான அனைத்து வீதிகளிலும் தடைகள் போடப்பட்டு பொலிஸார், இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

இதேசமயம், ஆலயத்திற்குள் அனுமதிக்கப்பட்ட அனைவரும், பி.சி.ஆர்., அன்ரிஜென் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## மக்களுக்கு 3ஆவது தடுப்பூசி குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி ஆலோசனை

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 09

"எதிர்வரும் நாட்களில் நாட்டு மக்களுக்கு மூன்றாவது தடுப்பூசி அல்லது பூஸ்டர் தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஆராயுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்."

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாட்டின் கொரோனா நிலவரம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துக் கூறும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டை முடக்க வேண்டாம் நாங்கள் பொறுப்பாக நடந்துகொள்கின்றோம் என்று மக்கள் கூறுவதனாலேயே நாட்டை முடக்காது வைத்திருக்கின்றோம் என்றும் அவர் கூறினார்.

எனவே, சுகாதார ஒழுங்கு விதிகளைப் பின்பற்றி கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## திறைசேரி செயலருக்கு தொற்று: அமைச்சர் பஸிலையும் சந்தித்தார்!

கொழும்பு, ஓக. 09

திறைசேரி மற்றும் நிதியமைச்சின் செயலாளரான எஸ். ஆர். ஆட்டிகல கொரோனா தொற்றுக்கு இலக்கானார்.

அவர் தற்போது சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளார். இதேசமயம் அவருடன் நெருங்கிப் பணி புரிந்த அனைவரையும் சுயதனிமைப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஆட்டிகல கடந்த வியாழக்கிழமை நிதியமைச்சில் நடந்த கூட்டம் ஒன்றில் அவர் பங்கேற்றுள்ளார். அத்துடன், பஸில் ராஜபக்ஷ மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் சிலரையும் அவர் சந்தித்துப் பேசினார் என்று தெரியவருகின்றது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தடுப்பூசிகளின் வர்த்தகபெயர்களை மறந்துவிட்டு அதனை தாமதிக்காமல் போட்டுக்கொள்ளுங்கள்!

## மனோ கணேசன் எம்.பி. வேண்டுகோள்

**கொழும்பு, ஓக. 09**

**“கொரோனாத் தடுப்பூசிகளின் வர்த்தகப் பெயர்களைப் போட்டு குழப்பிக்கொள்ள வேண்டாம். இவை பற்றிய கருத்துகள், வழமையான மருந்து வர்த்தக உலகப் போட்டா போட்டி விவகாரம். உள்நாட்டில் வாழ்வதற்கும், வெளிநாடு செல்வதற்கும் முதலில் உயிர் வாழ வேண்டும். ஆகவே, தடுப்பூசிகளின் வர்த்தகப் பெயர்களை மறந்து விட்டு, தடுப்பூசியை தாமதிக்காமல் போட்டுக்கொள்ளுங்கள். குறிப்பாக கொழும்பு மக்கள் இனியும் தாமதம் செய்ய வேண்டாம். இங்கே அனர்த்தம் வெளியே சொல்லப்படுவதை விட அதிகம் என்பதை பொறுப்புடன் கூறுகின்றேன்.”**

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனாத் தடுப்பூசிகளின் வர்த்தகப் பெயர்களைத் தெரிவு செய்து பெற்றுக்கொள்வது காரணமாக தடுப்பூசிகள் பெற்றுக் கொள்ளாமல் பலர் இருப்பது தொடர்பில் மனோ எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

“நான் ஊருக்கு மட்டும் உபதேசம் செய்யவில்லை. நானும் அப்படிதான் தடுப்பூசி போட்டுக் கொண்டேன். கொழும்பு ஜிந்து பிட்டி மாநகர சபை பொது வைத்திய வாரியத்தில், ஜூன் 21ஆம் திகதியன்று பொது மக்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டபோது, நானும் அங்கு போய், அவ்வேளையில் அங்கிருந்த சினோபார்ம் தடுப்பூசியைத்தான் போட்டுக் கொண்டேன். இராணுவ வைத்திய சாலையில் எம்.பிக்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டபோது அங்கு நான் போகவில்லை. அவ்வளவுதான். இதில் எந்தவித பிரச்னையும் இல்லை.

“கொரோனா அனர்த்தத்தைத் தடுக்க நடவடிக்கை எடுங்கள்” என நாம் கடந்த 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் புலம்பியும், இந்த அரசு, பல கோமாளி வேலைகளை செய்து காலத்தை ஓட்டியது. கடந்த வருடம் மார்ச் மாதம் அலரி மாளிகையில் பிரதமர் நடத்திய கொரோனா தடுப்பு தொடர்பான கட்சித் தலைவர்கள் கூட்டத்தையடுத்து, “இந்நாடு ஒரு தீவு. இதனால், எங்களுக்கு நான்கு புறம் கடல் என்ற இயற்கை அரண் இருக்கின்றது. ஆகவேதான் நோயாளிகள் குறைவாக இருக்கிறார்கள். ஆனால், நோயாளிகளுடன் பழகிய முதற் தொற்றாளர்கள் 40 ஆயிரம் பேர் இருக்கின்றார்கள். அவர்களை உடன் கண்காணியுங்கள்” என்று நான் கூறினேன்.

அவ்வேளையில், நோயாளிகள் 40 ஆயிரம் பேர் இருப்பதாக நான் பொய் சொல்லி நாட்டைக் குழப்புகின்றேன் என்று சொல்லி, அரசுதரப்பு அரசியல்வாதிகளான எஸ்.பி. திஸாநாயக்க, உதய கம்மன்பில ஆகியோர் என்னைத் திட்டினார்கள். ஜிநானந்த தேரர் என்ற அரசு சார்பு பௌத்த பிக்கு என்னைக் கைது செய்யும்படி சி.ஐ.டியில் புகார் செய்தார். பொலிஸ் என்னை விசாரிக்கவோ, கைது செய்யவோ வரவில்லை. ஆனால், இன்று அந்த முட்டாள் அரசியல்வாதிகளின் ஆட்டங்கள் முடித்துள்ளன. அந்த முட்டாள் பிக்குவையும் காணோம்.

அதன்பிறகு இன்றைய அரசு, பவித்ரா வன்னியாராச்சி, பிரசன்ன ரணதுங்க, உதய கம்மன்பில ஆகிய அமைச்சர்களைக் கொண்டு, ‘மந்திர’ சட்டியை களனி கங்கையில் போட்டு, தம்மிக்க என்பவரின் நாட்டு வைத்திய பாணியை பாராளுமன்றம் வரை கொண்டு வந்து வயதான சபாநாயகருக்கும், வயதாகும் சுகாதார அமைச்சருக்கும் பருக்கி, ஒரு வருடத்தை வீணடித்து, மக்களின் மரணங்களுக்கும், துன்பங்களுக்கும், அழுகுரல்களுக்கும், கண்ணீருக்கும் காரணமாகி விட்டது.

இன்று, நமது நாட்டுக்கு இலவசமாக அல்லது போட்டி நிறைந்த உலக நிலைமைகளில் விலைக்காகவது, பெருந்தொகை தடுப்பூசிகளையும், அவற்றை விலைக்கு வாங்க நிதி உதவிகளையும் தந்த இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நட்பு நாடுகளுக்கும், ஐநா, உலக சுகாதார ஸ்தாபனம், உலக வங்கி. ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய அமைப்புகளுக்கும் நன்றி.

ஆகவே, இன்று தரப்படும் தடுப்பூசிகள் இந்த அரசால் தரப்படுபவை அல்ல. மேற்கண்ட நட்பு நாடுகளும், நட்பு உலக அமைப்புகளுமே அவற்றை தருகின்றன. தரப்பட்ட தடுப்பூசிகளை நமது நாட்டு, சுகாதாரத்துறை மருத்துவ ஊழியர்களும், இராணுவத்தினரும் மிக சிறப்பாக மின்னல் வேகத்தில் மக்களுக்கு செலுத்துகின்றனர். 24 மணித்தியாலங்களில், இவர்கள் 48 மணித்தியால வேலைகளை படுவேகமாகச் செய்கிறார்கள். இவர்களுக்கு நன்றி கூற முழு நாடும் கடமைப்பட்டுள்ளது.

இந்த மந்திர பாணி, மந்திர சட்டி கோமாளி வேலைகளை கைவிட்டு, கடந்த வருடமே இன்று போல் இந்த தடுப்பூசிகளை பெற்றுக் கொடுத்து இருந்தால், இந்நேரம் முழுநாடும் தடுப்பூசிகளைப் பெற்றிருக்கும். அவற்றை இவர்கள் சிறப்பாகச் செய்து முடித்து இருப்பார்கள். நான்கு புறமும் கடல் என்ற, இயற்கை அரண் கொண்ட ஒரு தீவான எமது நாடு, உலகில் கொரோனாவை முறியடித்த முதல் நாடாக வெற்றிக்கொடி நாட்டியிருக்கும்.

எது எப்படி இருந்தாலும், இந்த வேளையில், சுகாதாரத்துறை மருத்துவ ஊழியர்களுக்கும், இராணுவத்தினருக்கும் முழு ஒத்துழைப்பை வழங்கும் முகமாக, நாம் கொரோனாத் தடுப்பூசிகளின் வர்த்தகப் பெயர்களைக் கேட்டு நிற்காமல் இருப்பதை போட்டுக்கொள்ள வேண்டும். அதன்மூலம் படுவேகமாகப் பரவி வரும் டெல்டா கொரோனா கிருமிகளில் இருந்து உங்களையும், நாட்டையும் பாதுகாக்க முடியும்” - என்றார்.

(இ)

# குடும்ப சுகாதார அதிகாரிகள் 600 பேருக்கு தொற்று உறுதி

நாட்டில் 600 இற்கும் மேற்பட்ட குடும்ப சுகாதார அதிகாரிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி படுத்தப்பட்டுள்ளது என அரச குடும்ப சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நீர்கொழும்பு கொரோனா சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் ஒருவர் இடப்பற்றாக்குறை காரணமாக நிலத்தில் மெத்தையை விரித்து சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

சுகாதார சேவையாளர்களைப் பாதுகாப்பதற்கு சுகாதார அதிகாரிகள் சரியான முறைமை ஒன்றை உருவாக்கவில்லை. இது கவலை தரும் விடயமாகும்” - என்றார். (இ)



# ஹிஷாலினி மரண பரிசோதனை: தயாராகின்றது இறுதி அறிக்கை

கொழும்பு, ஓக. 09

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் பணியாற்றிவந்த நிலையில், தீக்காயங்களுக்கு உள்ளாகி உயி ரிழந்த சிறுமி ஹிஷாலினியின் இரண்டாவது மரண பரி சோதனை அறிக்கை தற்போது தயாரிக்கப்படுகின்றது.

இதற்கமைய இரண்டாவது முறையாக மேற்கொள்ளப் பட்ட மரண பரிசோதனையின் போது பெறப்பட்ட மாதிரிகள் மேலதிக விசாரணைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

பேராதனை போதனா வைத் தியசாலையில் ஹிஷாலினியின் இரண்டாவது மரண பரிசோ தனை அண்மையில் இடம் பெற்றது.

இதற்கமைய இது குறித்த இறுதி அறிக்கை தற்போது தயாரிக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் பணியாற்றிவந்த நிலையில், தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்த சிறுமி ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி கோரி பொகவந்தலாவ கெம்பியன் கீழ் பிரிவு தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் அந்த மக்கள் மெழுகுவர்த்தி ஏற்றி சிறுமி ஹிஷாலினிக்கு அஞ்சலி செலுத்தினர். (இ)

# மனித மண்டையோடு வவுனியாவில் மீட்பு!



வவுனியா, ஓக. 09

வவுனியா மாவட்டம், தாண்டிக்குளம் வயல் பகுதியில் இருந்து மனித மண்டையோடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியிலுள்ள வயல் வெளியில் நின்றவர்களால் நேற்று பிற்பகல் மண்டையோடு ஒன்று அவதானிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்குத் தெரியப் படுத்தப்பட்ட நிலையில் வவுனியா பொலிஸார் குறித்த மண்டையோட்டை மீட்ட நிலையில் விசார ணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ)

# யாழில் கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 09

யாழ்ப்பாணம் முஸ்லிம் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கொரோனாத் தடுப்பு சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது தொடர்பில் விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது முகக் கவசங்கள், கொரோனா சுகாதார நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியில் முஸ்லிம் ஒன்றிய உறுப்பினர்களால் குறித்த விழிப்புணர்வு செயல்பாடு நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

கொரோனாவிலிருந்து இருந்து எங்களையும் எங்கள் நாட்டு மக்களையும் பாதுகாப்போம், வீட்டை விட்டு வெளியேறும் போது முகக்கவசம் அணிந்து செல்வோம், கைகளைக் கழுவுவோம் போன்ற பல விழிப்புணர்வு விடயங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களும் வீதியால் பயணித்த மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (இ - 03)






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துணையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு





7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : சுப்பர் குறூப்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
**பகல்**
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ஜெயம்
கொண்டான்,கயல் ஆகிய திரைப்பட காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா-பற்சிகிச்சை வைத்திய துஷீபன்



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி
இவ்வாரம் -வீரியம் அடையும் பிரதேச வாதம்
என்பது வடக்கிலா தெற்கிலா
புரையோடிப்போயுள்ளது.




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு